• REGISTERED AT THE G. P. O. AS A NEWSPAPER

# ஈழகேசரி

தேசிய வார வெளியீடு

மலர் 19 | சுன்னாகம், விரோதி வைகாசி ௧௬ (காந்தி ஆண்டு 80) 29-5-'49, ஞாயிறு | இதழ் 42

## சினிமாப் பாட்டுப் புத்தகங்கள்

40 விதமான வெவ்வேறு சினிமாப் படங்களின் பாட்டுப் புத்தகங்களில் வகைக்கு 25 வீதம் 1000 புத்தகங்களை ஒரேமுறையில் வாங்குவோருக்கு ரூபாய் 40/- விலையிட்டுக் கொடுக்கப்படும். ரூபாய் 10/- முற்பணமாக அனுப்பி வி. பி. பி. மூலமும் பெற்றுக்கொள்ளலாம்.

**த. தம்பித்துரை**
நியூஸ் ஏஜென்ட்
பத்திரிகைகள் கதைப்புத்தகங்கள் முதலியன விற்பனை செய்வோர்
கச்சேரியடி : : யாழ்ப்பாணம்
கிளை:- பெரியகடை : : யாழ்ப்பாணம்

# அமெரிக்காவின் நடுக்கம்?

## சீனத்தின் துயர்

**சீனத்திலே கொம்யூனிஸ்டுகள் ஈட்டி வரும் 'கொழுத்த' வெற்றிகள் அமெரிக்காவுக்குக் குடல் நடுக்கத்தை உண்டாக்கி வருகின்றன.**

எனவே, ஒத்த கொள்கைகளைக் கொண்ட நாடுகளை ஒன்று கூட்டிக் கொம்யூனிஸ்ட் சீனத்துடன் எவ்வாறு நடந்துகொள்ள வேண்டுமென்பதைப் பற்றி அமெரிக்கா தீர்மானித்துள்ளது.

இந்நாடுகள் கலந்தாலோசனை செய்யாது, சீனத்துடன் சோவியத்து ஆட்சியை ஒப்புக்கொள்ளக் கூடாதென்பதே அமெரிக்காவின் கட்சியாகும்.

சீனம் சம்பந்தமான கூட்டுக் கொள்கையை உருவாக்குவதற்காக இலங்கை, இந்தியா, பாகிஸ்தான் ஆகிய நாடுகளும் சேர்ந்துகொள்ள வேண்டுமென அமெரிக்கா விரும்புகின்றது. அவ்வாறே, பிரிட்டன், பிரான்ஸ், ஒல்லாந்து, பெல்ஜியம் அவுஸ்திரேலியா போன்ற நாடுகளும் குறித்த மகாநாட்டிற் சேர்ந்துகொள்ள வேண்டுமாம்.

இந்நாடுகள் ஒன்று கூடும்போது பின்வரும் இரு முக்கிய கொள்கைகளைப்பற்றிப் பேச்சுவார்த்தைகள் நடாத்துமெனத் தெரிகின்றது:

1. சீனத்தின் புதிய அரசாங்கம் இன்னும் உருவாகவில்லை. ஆகவே, புதிய அரசாங்கம் ஏற்படும் வரை அதை ஒப்புக்கொள்ளும் விஷயத்திற் குறித்த நாடுகள் சாவதானமாக இருத்தல் அவசியம்

2. சீனத்துக் கொம்யூனிஸ்டுகள் குறித்த நாடுகளை ஒன்றோடு ஒன்று கொளுவிவிட்டுத தங்கள் காரியங்களைப் பார்த்துக் கொள்ளுவார்கள். இவ்விதமான சம்பவங்கள் நடவாதிருக்குமாறு ஏனைய நாடுகள் ஒன்றுசேர்ந்து கருமமாற்றவேண்டும்.

இந்நிலையில் துயரில் ஆழ்ந்து சோழிந்து வரும் சீனத்தைப் பற்றி அறிந்துகொள்வது மிகவும் பொருத்தமானது:

### பழம் பெரும் சீனம்

**மிகப் பழைய கலாசாரமும்** நாகரிகமும் கைவரப் பெற்ற சீனம் இச்சமயத்திற் பரிதாபமான நிலையை அடைந்துவருகின்றது. ஷங்காய் நகரும் கொம்யூனிஸ்டுகள் வசமாயிற்றென்ற புதினம் எட்டியுளது. ஷங்காய் நகரம் 6,000,000 குடிசனங்களையுடையது. உலகிலுள்ள எல்லாச் சாதியினர் சமயத்தினர் என்போரை இங்கு காணலாம். இது ஓர் சர்வதேச நகரம் எனினும் பொருந்தும். இங்கு பெருந்தொகையாக அமெரிக்கர், பிரிட்டிஷார், யப்பானியர், சீனர், இந்தியர்கள் போன்ற வெளிநாட்டினரும் வசிக்கின்றனர். வியாபாரமே இங்கு இவர்களைக் கவர்ந்துள்ளது. ஏறக்குறைய ஆயிரம் இந்தியர்வரையில் இங்கு வசிக்கின்றனர்.

### மாற்றங்கள்

சீனர்கள் பெருந்தொகையாக வசிக்கும் ஷங்காய் நகர் அவர்களின் உண்மையான கலாசாரத்தை வெளிகாட்டாது கண்மூடித் தனமாக மேனாட்டு நவீனங்களில் சென்றுகொண்டிருப்பதைக் காணலாம். எந்தப் பெரிய ஸ்தாபனமும் ஐரோப்பிய மயமாகவே இருக்கின்றது. மிகப் புகழ் படைத்த புராதன கலாசாரத்தின் தொனிப்பினைக் காணுது மகா கஷ்டமாகும். ஷங்காய் நகரிலே பெரிய பல்கலைக் கழகம் ஒன்றுளது. இது முற்று முழுதாகக் கிறீஸ்த பாதிரிமாரால் நடத்தப்படுகின்றது. சீனரின் பழைய நாகரிகம் கலாசாரம் என்பனவற்றை இவர்கள் சிறிதும் கவனிப்பதில்லை. இங்கு கல்வி பயிற்றும் பேராசிரியர்கள் அத்தனைபேரும் அமெரிக்கரும் பிரிட்டிஷாருமாகவிருக்கின்றனர். உயர்தரக் கல்வியைக் கற்பதற்கு இன்றும் சீனதேச மாணவர் ஐரோப்பிய அமெரிக்க நாடுகளை நோக்கிச் செல்வர். சீனபாஷையிற் போதிய நூல்கள் கிடையா. ஆங்கில நூல்களும் பாஷையுந்தான் இப்போது சீனர்க்கு மிக ஆதாரமாக இருக்கின்றன. வித்தியாசாலைகளில் ஆங்கிலபாஷை கட்டாய பாடமாகக் கற்பிக்கப்படுகின்றது.

(தொடர்ச்சி 7-ம் பக்கம் பார்க்க)

# திருச்சபை வைபவம்

## முதலாவது தமிழ் மேற்றிராணியார்

கத்தோலிக்க திருச்சபையின் வனப்புமிக்க வைபவங்களினிடையே, பக்தர்கள் மத்தியில், வணக்கத்துக்குரிய டொக்டர் ஜே. எமிலியானுஸ் பிள்ளை உப மேற்றிராணியாராக அபிஷேகம் செய்யப்பட்டார். பயபக்தியும், அலங்காரமும் நிறைந்த இவ் வைபவத்தைப் பார்ப்பதற்காக யாழ்ப்பாணத்தின் பல பாகங்களிலிருந்தும் கத்தோலிக்க திருச்சபையைச் சேர்ந்தவர்களும் ஏனைய பிரமுகர்களும் பிரசன்னமாயிருந்தனர். சென்ற ஞாயிற்றுக்கிழமை காலை நடைபெற்ற இவ் விழாவிற் பொதுமக்களுங் கலந்துகொண்டனர்.

கொழும்பு, காலி, கண்டி, மட்டக்களப்பு, திருகோணமலை போன்ற பிற இடங்களிலிருந்தும் குருமார்களும் கத்தோலிக்கப் பிரமுகர்களும் வந்திருந்தனர்.

யாழ்ப்பாணம் பரிசுத்த மரியாள் தேவாலயமும் சுற்றுப்புறங்களும் அன்று கண்கவர் வனப்புடன் காட்சிதந்து நின்றன. மேடை அலங்காரங்களும் திருப்பீடமும் பார்ப்போர் கண்களைப் பறித்தன.

தேவாலயத்துக்குள் அமைதியே குடிகொண்டிருந்தது. சரித்திரப் பிரசித்தி வாய்ந்த இந்த வைபவம் இரண்டரைமணி நேரம் நடந்தேறியது. அவ்வளவு நேரமும் அங்கிருந்த மக்கள் பக்தி சிரத்தையுடனேயே காணப்பட்டனர். குருமார்களும், திருச்சபை ஊழியர்களும், பிரமுகர்களும் புடைசூழத் தேவாலயம் நோக்கிச் சென்ற ஊர்வலத்தின் சிறப்பு குறிப்பிடத்தக்கது.

கத்தோலிக்கத் திருச்சபையின் பாதுகாவலனுகவும், ஆண்டவனின் ஊழியனுகவும் தம்மை அர்ப்பணம் செய்துகொண்ட உப மேற்றிராணியார் யாழ்ப்பாணத்தை யடுத்துள்ள ஊர்காவற்றுறையைச்

(தொடர்ச்சி 12-ம் பக்கம் பார்க்க)

## கொழும்பு-நிருபர் கடிதம்



# உயரப் பறத்தல்!

## பத்திரிகைத் துடியாட்டம்

27-5-49

"கொழும்பு, பம்பாய், லண்டன்; என்ன ஆச்சரியம்!" என்று சென்ற வருடம் லண்டனில் நடைபெற்ற சாம்ராச்சிய மகாநாட்டுக்குப் பிரதமர் சேனநாயகாவுடன் சென்ற அவருடைய வேலைக்காரன் குறிப்பிட்டானும்.

### விமானப் பிரயாணம்

அவனுக்கு அவ்வளவு வியப்பைக் கொடுத்துவிட்டது. இவ்வாரம் நான் இங்கு எழுதுவதைப் படித்துவிட்டு வாசகர்களும் ஆச்சரியப்படக்கூடும். காலை 11 மணிக்குக் கொழும்பைவிட்டுக் கிளம்பும் மிகப் பெரிய ஆகாயவிமானம் அடுத்தநாள் இரவு 9 மணிக்கு லண்டனைச் சென்றடையும். இந்த மாதிரியான ஒழுங்கை இலங்கை விமானப் பகுதியினர் அடுத்தமாதம் முதலாந் திகதி ஆரம்பிக்கின்றனர்.

பிரதி வாரமும் புதன்கிழமைகளில் லண்டனுக்கு விமானம் பறந்து செல்லும். காலை 11 மணிக்கு ரத்மலான நிலையத்தினின்றும் ஆகாய விமானம் புறப்படும். பம்பாயில் மத்தியானப் போசனம்; காராச்சியிற் சிற்றுண்டி, தேநீர்; கைரோவில் இராப்போசனம்; உரோமாபுரியிற் காலைச் சாப்பாடு. அப்புறம் விமானம் லண்டனில் இறங்கிவிடும்.

22 மணி நேரத்[illegible] லண்டனைச் சென்றடைவ[illegible] அது சாமானியமான காரியமன்று. சுதந்திரம் பெற்ற இலங்கை உயரப் பறப்பதைக் கண்டு குருவிஜாலங்களே சிறகடித்து ஆர்ப்பரிக்கின்றன!

வெள்ளிக்கிழமைகளிற் காலை 11 மணிக்கு லண்டனை விட்டுப் புறப்படும் விமானம், ஞாயிற்றுக்கிழமைகளில் இரவு 7-45 மணிக்குக் கொழும்பு வந்தடையும்.

கொழும்புக்கும் சென்னைக்குமிடையிற் பிரதி வாரமும் இலங்கை விமானங்களில் 65 பிரயாணிகளுக்கே இடங் கிடைக்கின்றன. புதிய ஒழுங்கின்படி இனி 96 பிரயாணிகளுக்கு இடங் கிடைக்குமெனத் தெரிகின்றது.

### வெள்ளம் குறைவு

சென்ற நாலைந்து தினங்களாக இங்கு நல்ல மழைபெய்த காரணத்தால் வெள்ளம் வந்துவிடுமோவென அரசாங்கம் பீதியடைந்தது. அதற்கான முன்னேற்பாடுகளையும் செய்து வந்தது. மழை பொழிந்து வெள்ளம் வந்தவிடத்தும் குறிப்பிடத்தக்க பயங்கரமான சேதங்கள் ஏற்படவில்லை. 'வெள்ளத்தடை' அதிகாரிகள் இம்முறை வெகு கவனமாக முயற்சித்து வந்தனர்.

### நடை பாதை

நடைபாதைகளிற் சாமான்களைக் கூறி விற்பவர்களை இப்[illegible] [illegible] காணமுடியாது. புறக்கோட்டை, மருதானைப் பகுதிகளிலும் முக்கியமான இடங்களில் இப்போதெல்லாம் இவர்கள் அடியெடுத்து வைப்பதில்லை. இவ்விடங்களில் இவர்கள் சாமான்களுடன் தலைகாட்டக் கூடாதெனக் கொழும்பு நகரசபை ஏப்பிரல் மாதத்திற் சட்டமாக்கியது.

ஆனால், கான்மணிக்கூட்டடி, வாழைத்தோட்டம் போன்ற வேறும் இருபகுதிகளில் இவர்களுக்கான இடங்கள் ஒதுக்கப்பட்டன.

கொழும்பு நகரத்துச் சுகாதார அதிகாரியான டொக்டர் ஜயவர்த்தன என்பவர் நடைபாதைகளிற் சாமான்கள் விற்பவர்களை எப்பகுதிகளிலும் அனுமதிக்கக் கூடாதென இப்போது கருதுகின்றார். இவர்களை அகற்றினுலன்றி முறைப்படி நகரத்தைச் சுத்திசெய்ய முடியாதென அவர் பத்திரிகை நிருபர் ஒருவருக்குத் தெரிவித்திருக்கின்றார். இது நன்கு ஆராயப்பட வேண்டிய விஷயம். பொதுமக்களின் சுக வாழ்க்கை எவ்வளவு அவசியமோ அதேபோன்று அன்றாடு உழைத்து ஜீவனம் செய்யும் மக்களுக்கும் வழிகாட்ட வேண்டியது அரசாங்கத்தின் பணியாகும்.

### கொழும்பு கூட்டுறவு

கூட்டுறவு இயக்கமானது இலங்கையின் பல பாகங்களிலும் பரவி உறுதி படைந்துவருகின்றது. சமீபகாலத்தில் மட்டக்களப்பு திருகோணமலைபோன்ற இடங்களிலும் கூட்டுறவு இயக்கம் நன்கு பரவி வந்துள்ளது. ஆனால், கொழும்பிலே கூட்டுறவு இயக்கம் அவ்வளவு அபிவிருத்தியடையவில்லை. புதன்கிழமையன்று பரி. பீற்றர் கல்லூரியில் நடைபெற்ற கூட்டுறவுச் சங்கக் கடைகளின் கூட்டமொன்றில் உணவு மந்திரி பேசியபோதுதான் கொழும்பு பற்றிய அபிப்பிராயத்தைத் தெரிவித்தார். சுயநலங் கருதாத ஊழியர்களே கூட்டுறவு இயக்கத்துக்கு ஆணிவேர் போன்றவர்கள். இத்தகையோர் இக்காலத்தில் நாட்டில் அருகிவருகின்றனர் போலும்.

நிற்க, யாழ்ப்பாணத்திலிருந்து திரும்பி வந்த நண்பர் ஒருவர், ஊர்காவற்றுறையில் நடைபெற்ற கூட்டுறவு மகாநாட்டைப் பற்றிப் பேசினுர். இதிற் பங்குபற்றிய உணவு மந்திரியின் நிரந்தரக்காரியதரிசி சொய்சா அவர்கள் யாழ்ப்பாணத்திற் கூட்டுறவு இயக்கம் தழைத்தோங்கி வருவதாகக் குறிப்பிட்டதுமன்றி யாழ்ப்பாணத்தவர்களின் முயற்சிகளையும் வெகுவாகப் பாராட்டினுர் என்று அறிகின்றேன்.

(தொடர்ச்சி 6-ம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஊ..........ர்

# வதந்தி



● கொண்டோடி ●

● அரசாங்கப் பிரசாரப்பகுதித் தலைவர் பெரும் நோக்கங்களைக்கொண்டவராம்.

☼ ஜனநாயக ஆட்சிமுறையில் என்ன நடைபெறுகின்றது என்று ஜனங்கள் அறிய வேண்டியது அவசியமாம்.

☼ பரம இரகசியமாக இருக்கும் சில நடவடிக்கைகளை அம்பலத்திற் கொண்டு வருவதுதான் பிரசாரப்பகுதியின் நோக்கமாம்.

☼ பிரசாரப்பகுதி பிரமாதமாக இருக்குமாம்.

● அரியாலைக் கடற்கரையில் ஒதுக்கப்பட்ட திமிங்கிலமும் பிரமாதமாகத்தான் இருந்ததாம்.

☼ ஆனால் இப்பொழுது திமிங்கிலத்தைக் காணவில்லையாம்.

☼ எலும்புக்கூடு மாத்திரந்தான் காணப்படுகின்றதாம்.

☼ இந்த எலும்புக்கூட்டை யாழ்ப்பாண நூதன பொருட்காட்சிச்சாலையில் வைப்பார்களாம்.

● மிக நூதனமான வேறு சில சங்கதிகளும் நடைபெறுகின்றனவாம்.

☼ அளவை என்ற ஊரில் சிங்கோ என்று ஒரு விதானை இருந்தாராம்.

☼ இவருக்குக் குதிரைப் பந்தய ஓட்டத்தில் வெகு விருப்பமாம்.

☼ ஒரு நாள் குதிரைப் பந்தய ஓட்டத்தை திடீரென நிறுத்தினார்களாம்.

☼ சிங்கோ விதானையின் இருதயமும் திடீரென்று நின்றுவிட்டதாம்.

☼ குதிரைப்பந்தய ஓட்டத்தை அறவே யொழித்துவிட்டார்களானல் எத்தனையோ பெரியார்களின் இருதயமும் நின்றுவிடுமாம்.

☼ இதனுற் சொந்தக் குடும்பத் தொலலைகளும் தன்பாட்டிலே நின்றுவிடுமாம்.

● தேசியக் கொடியின் தொல்லைகளும்நின்றுவிட்டனவாம்

☼ இலங்கையில் தமிழர்களும் முகமதியர்களும் இருக்கிறார்களாம்.

☼ முகமதியருக்குக் கொஞ்சம் பச்சையாம்.

☼ தமிழருக்குச் சொற்பக் காவியாம்.

☼ ஆனல் இதன் முடிவை ஒரு மாதத்தின் பின்தான் வெளிப்படுத்தவேண்டுமாம்.

● சிலாபம் — நீர்கொழும்புத் தோட்டப்பகுதித் தலைவர் இம்மானுவேல் முத்துக்குமாருவும் சில சங்கதிகளை வெளிப்படுத்தி யிருக்கிறாராம்.

☼ இலங்கையிலிருந்து வெளியே போகும் பொருள்களின் விலைகள் குறைகின்றனவாம்.

☼ இலங்கைக்கு வரும் பொருள்களின் விலைகள் கூடுகின்றனவாம்.

☼ இதன் காரணமாக இலங்கை 'வங்குரோட்டு' அடித்தாலும் அடிக்குமாம்.

● இலங்கை யுவதிகளுக்கும் அதிர்ஷ்டம் அடித்திருக்கின்றதாம்.

☼ மன்னர் தம்பதிகளைக்காண இரு யுவதிகள் சென்றிருந்தார்களாம்.

☼ ஒருவர் பிரதமரின் மருமகளாம்.

☼ மற்றவர் இந்திராணி குமாரசுவாமியாம்.

☼ இதனுல் இலங்கைக்குப் பெரும் பெயர் வந்துவிட்டதாம்.

☼ மன்னர் தம்பதியின் பேட்டியைக் காண்பது கனவென்றே கருதவேண்டுமாம்.

☼ இந்தக் கனவை நேரிற் காண்பதற்கு இங்கிலாந்து செல்லவேண்டியதில்லையாம்.

☼ இந்தக் கனவை எங்களிற் சிலரும் இங்கிருந்து கண்கூடாகக் கவனித்து வருகிறார்களாம்.

● கண்கூடாக வேறு காரியங்களும் தெரியவருகின்றனவாம்.

☼ இலங்கை அரசாங்க உத்தியோகத்தர் ஒருவர் சென்னை சென்றாராம்.

☼ கலைக்களஞ்சியக் காரியாலயத்திற்கும் சென்றாராம்.

☼ தான், பல்கலைக்கழகப் பேராசிரியர் என்றாராம்.

☼ கலைக்களஞ்சிய வேலைகளைத் தானே இலங்கையிற் செய்யக்கூடும் என்றும் சொன்னாராம்.

☼ கலைக்களஞ்சியத்தார் சரி போய்வாரும் என்றார்களாம்.

☼ இலங்கைப் பத்திரிகையொன்றில் ஒரு கடிதம் வெளிவந்ததாம்.

☼ ஆசிரியர் ஒருவர் விபரம் அறிய விரும்பினராம்.

☼ பேராசிரியரைக் கண்டபோது குட்டு வெளியாயிற்றும்.

☼ சென்னைக்குக் காவடியெடுத்த ஊழியர் காவடியை இறக்கினராம்.

☼ இப்போது மீண்டும் கலையைக் கொதிக்கவைத்துக் கொண்டிருக்கிறாராம்.

☼ இந்தக் காவடி எடுத்த பிள்ளையாரென உங்களிற் பலருக்குத் தெரியுமாம்.

☼ ஆகையால் அவரது பெயரைச் சொல்லவில்லையாம்.

● சொல்லத் தேவையற்ற சில சொற்களையும் அஞ்சல் செய்கிறார்களாம்.

☼ இந்த 'ரேடியோ' அஞ்சலியினுல் ஊருக்கே கெடுதி வருமாம்.

☼ மீன்பிடி மந்திரி ஒரு கூட்டத்தில் டொக்டர் நாகநாதனைத் தாக்கிப்பேசினராம்.

☼ இதில் ஒரு பகுதியைக் கொழும்பு 'ரேடியோ' நிலையத்தார் சிங்கப்பூருக்கு ஒலிபரப்பினர்களாம்.

☼ சிங்கப்பூருக்கு ஒலிபரப்பப்பட்ட இந்தச் செய்தி அந்தமாண், யாவா, சுமாத்திரா முதலிய பிரதேசங்களிலும் சாடையாக ஒலித்திருக்குமாம்.

☼ ஆகையால் இலங்கையில் சொற்பொழிவே செய்யக்கூடாதாம்.

☼ அஞ்சல் செய்வார்களென்று அஞ்சவேண்டியிருக்கிறதாம்.


சிறந்தபலனுக்கு

## C. C. C. புகையிலைப்பசளை

கொழும்பு
கொமர்ஷல்
கொம்பனியார்

இரண்டு விதமான வெவ்வேறு கலவைகள் எங்களால் தயாரிக்கப்பட்டுக் கொடுக்கப்படுகின்றன. ஒன்று சப்புகிற புகையிலைக்கு வேண்டிய மாதிரியிற் பிரத்தியேகமாகக் கலவை செய்யப்படுகிறது. மற்றது சுருட்டுப் புகையிலை அல்லது குடி புகையிலைக்கு வேண்டிய மாதிரியில். இவ்விரு கலவைகளும் தோற்றத்தில் அதிக வித்தியாசமுடையவை. கமக்காரர்கள் தங்கள் தேவைக்கு எழுதும் போது தாங்கள் பசளையிடப்போகும் புகையிலை (மேலேகாட்டிய) எந்த வகையைச் சேர்ந்ததென விபரமாகக் கூறவேண்டும்

## C. C. C.

கொழும்பு
கொமர்ஷல்
கொம்பனி
லிமிற்றெட்

[பெரிய பிரித்தானியாவில் சமுதாயமாக்கப்படட, அங்கத்தவர்களின் உத்தரவாதம் மட்டுப்படுத்தப்பட்டது.]

விசேஷ ஆலோசனை இலவசமாகக் கூறப்படும். எங்கள் விசேஷ விற்பனை ஒழுங்குகளைப்பற்றியவிபரங்களுக்கு உடனே எழுதவும்.

The
**Colombo
Commercial
Company**
LIMITED.

INCORPORATED IN
GREAT BRITAIN
LIABILITY OF MEMBERS Ltd.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கல்வி பயிற்றல்—IV

# பரம்பரையும் சூழலும்

"வேரோடி விளாத்தி முளைத்தாலும் தாய்வழி தப்பாது; நாலைப்போலே சேலை தாயைப்போலே பிள்ளை, பாகற் கொட்டை போடச் சுரைக் கொட்டை முளைக்குமா?" என்று சில பழமொழிகள் நாட்டில் நடமாடுவதை நாம் அறிவோம். இவை மிகவும் பயின்றிருப்பதும் பரம்பியிருப்பதும் இவற்றின் சிறந்த பொருத்தத்தாலேயே. ஆதலின், இங்கே தாய் தந்தையரின் பரம்பரை மிகவும் வற்புறுத்தப்படுகின்றது.

சார்ந்ததன் வண்ணமாகும் பளிங்கு "நீரின் தன்மை நிலத்தை ஒத்தது;" என்றும் வழங்குவனவற்றை அறிவோம். இவற்றால் சூழலின் இன்றியமையாமையும் வற்புறுத்தப்படுகின்றது. இவை இரண்டிற்கும் யாதும் தொடர்பு உண்டா? இவற்றால், வளரும் குழந்தை பாதிக்கப்படுகின்றதா? என்பதைச் சிறிது ஆராய்வோம்.

## உள்ளது சிறத்தல்

போக்குவரவு, ஆற்றல், வலிமை, பேச்சு முதலியன வற்றால் மிருகங்களினும் மனிதன் விஞ்சியிருக்கின்றான். உள்ளது சிறத்தலாலேயே (Evolution) அவனுக்கு இவை எல்லாம் காலகதியிற் கைவந்தன. அப்படியே, 'கூர்தல்' என்னும் தொழில் ஜீவகோடி எல்லாத்திலும் நிகழ்ந்து கொண்டு வருகின்றது. விந்துகளிலோ அண்டங்களிலோ, எங்கு இந்த மாற்றங்கள் உண்டாகின்றன என்று பார்ப்போம். மனிதன், மிருகம், பறவை இவற்றின் விந்துகளின் அணுக்களுள்ளே கால், கை, சிறகு முதலிய வித்தியாசங்களுக்கு உரிய அத்தாட்சிகளோ கிடையா. என்னின், குண வித்தியாச அத்தாட்சிகளைப்பற்றிப் பேசவேண்டியதில்லை. (Sperms) ஸ்பேம்களிலுள்ள ஜீவ அணுக்கள் (Germplasms) எல்லாம் ஒரேமாதிரி உள. ஆனால் அவை உருவாகும்போதே வித்தியாசம் அடைகின்றன.

## மாறும்தன்மை

இவ்வுருவத்திலுள்ளும் சில உண்மைகள் உள. ஒரு நொண்டியின் பிள்ளை நொண்டியாவதில்லை. ஒரு நெடியவன் பிள்ளை பெரும்பாலும் நெடியதே. ஒரு பூனைக்கண்ணன் பிள்ளை கட்டாயம் பூனைக் கண்ணுடையதாவதில்லை. ஆனால் அவனுடைய மூன்றாம் நான்காம் தலைமுறையில் அது திரும்பி வரும். கண்பார்வை குறைவானவரின் பிள்ளை அப்படியே பார்வை குறைந்ததாகின்றது. ஒரு மிக நல்லவரின் பிள்ளைகள் நல்லவராகவும் கூடாதவராகவும் வருகிறார்கள். பெற்றாரில்லாத தன்மைகளைச் சூழல் கொடுக்கின்றது. பெற்றார் கொடுத்த சில தன்மைகளைச் சூழல் மாற்றியும் விடுகின்றது!

ஆதலின், மனிதன் என்னும் பொருள், சூழலினதும் பரம்பரையினதும் பெருக்கம் என்று கொள்ளல் வேண்டும். குழந்தை பிறக்குமுன், சூழல் உண்டா? அது தாயின் வயிற்றில் இருக்கும் 280 நாட்களிலும் தாயின் சூழலால் ஏற்படும் விருப்பு வெறுப்புக்களை ஆதாரமாகக்கொண்ட ஒரு தனிச் சூழலில் வாழும். அப்பொழுது அந்தச் சூழல் அதனைப் பாதிக்கும், சைகோட் (Zygote) நிலையில் விந்துக்கு ஏற்படும் பரம்பரைக் குணமும் ஆற்றலும்

— அ. வி. ம. —

அக் குழந்தைக்கு வந்து சேரும்.

## சம ஆற்றல்

இப்படி ஆற்றலோடு பிறக்கும் குழந்தை ஒவ்வாத பரம்பரையோடு வருமாயின் அதனைச் சூழல் மாற்றக்கூடும். பாணடோ விடுதிகளில் (Barnardo Homes) பெற்றார் பெயர்வழி அறியாத பிள்ளைகள் எல்லோரும் சிறந்த சூழலில் வளர்ந்து சாதாரண குழந்தைகள்போலப் பழக்க வழக்கமுடையவர்கள் ஆனார்கள். இதனை அடிப்படையாகக்கொண்டு ருஷியா அரசாங்கமும் சம உரிமை யாவருக்கும் கொடுத்தால் சம ஆற்றல் யாவருக்கும் உண்டாகும் என்று வாதிக்கின்றனர்.

பரம்பரைக்கும் விந்திற்கும் தொடர்பு உண்டு; மேலும் சந்ததித் தொடர்புக்கும் அச்சந்ததியாருடைய உற்பத்திப் பொருளிற்கும் தொடர்பு உண்டு. ஒரு சந்ததிக்குப் பிரத்தியேகமான அந்தர்க்கதம் (potentiality) ஒன்று உண்டு. அதனைச் சூழல்மாற்றம் என்று சிலர் வாதிப்பர். இலெசென்கோ (Lysenko) என்ற ருஷியர் அப்படி நிரூபித்தார். பின்னர் அது பிழை என்றும் நிரூபிக்கப்பட்டுவிட்டது. அதனை மோகன் (Morgan) என்பவர் தாம் மறுத்து நிரூபித்தவர்.

## கலப்பற்ற விருத்தி

இனி, ஒருபரீட்சை செய்யப்படுகின்றது. இரண்டு விவேகிகளை எடுத்து நல்ல சூழலில் வளர்ப்போம். இவர்களுள் ஒரு பிள்ளைக்கு மாத்திரம் கல்வி பயிற்றுவது. அப்படியே இரண்டு பெண்பிள்ளைகளுக்கும் அதே சூழல் அனுபவம் கொடுப்போம். ஒரு பிள்ளைக்குமாத்திரம் கல்வி ஊட்டப்படும். ஆனால் இருவரும் விவேகிகள்தான். இவர்களுள் படித்த இருவரும் கூடுகிறார்கள். படியாத இருவரும் கூடுகிறார்கள். இவர்களுக்கு நல்ல விவேகிகளான பிள்ளைகள் பிறக்கின்றன. இந்தப்பிள்ளைகள் இரண்டும் ஒரே விவேகத்தோடுதான் படிக்கத் தொடங்குகின்றன; அறிவு வித்தியாசமோ இல்லை.

இரு 'மக்தர்' (Morans) பெறும் பிள்ளைகள் மந்தராகத்தான் காணுகின்றனர். நிகிரோவரின் பிள்ளைகளுக்கும் நம்முடைய பிள்ளைகளுக்குமிடையில் சமூக பரம்பரை, வித்தியாசமாகவே இருக்கும். ஆனால் விவேகம் ஒன்றாகவோ வித்தியாசமாகவோ இருக்கலாம். கல்வி புறச்சூழலால் வருவது. அது உள்ளேயிருக்கும் அந்தர்க்கத ஆற்றல்களை விருத்திசெய்ய உதவுவது. நமது பரம்பரை ஆற்றல்களையும் வல்லபங்களையும் கல்வியால் தீட்டிக் [illegible] கொண்டு வேறு [illegible] இல்லாது சுத்த விருத்தி செய்து வருவோமானால் நம் சாகியம் மிகமிக விவேக சாகியமாகும். ஹிட்லர், டார்வின், வெட்சவூட், முதலியோரின் திருட்டாந்தமும் இதுவேயாகும்.

## ஒலிப்பரீட்சை

இனி, கால்கள் இல்லாத மனிதனுக்குப் பிறக்கும் பிள்ளைகள் சாதாரண குழந்தைகளைப்போலக் காலுடன் பிறக்கின்றன. பூனைக் கண்ணுள்ள தாயின் குழந்தையோ அல்லது அதன் குழந்தையோ பூனைக்கண்ணோடு பிறக்கின்றது. நல்ல தசைநாருடைய உடம்புள்ள கொல்லனின் குழந்தை தசைநாரோடு பிறப்பதில்லை. ஆனாலும் தடித்த உருண்ட குழந்தையாகப் பிறக்கின்றது. எல்லாம் உண்மையே.

'லெமாக்' (Lermark) என்பார் எலிகளின் வாலை 25 சந்ததிக்கு நறுக்கிப்பார்த்தார். 26-ம் சந்ததியிலும் பிறந்த எலிக்குஞ்சு வாலுடன்தான் பிறந்தது! ஆதலால், உள்ளேயிருந்து தூண்டுதல் இல்லாமல் எலி தன் வாலைக் குறைக்காது என்று கண்டார். அந்த விருப்பு பரம்பரையாக விருத்தியாகிவரல் வேண்டும் என்றார் பேணுட் ஷோ. அப்பொழுதான் வால் மறையும்.

'மக்டூகல்' வேறொரு பரீட்சை செய்தார். எலிகளை நீர்த்தொட்டியில் விட்டு, இரண்டு வாசலால் புறப்படச் செய்தார். ஒரு வாசலில் மின்சாரம் ஏற்றியிருந்தது; மற்றதில் இருளடைந்திருந்தது. எல்லாம் முதலில் வெளிச்சமான பாதையாற் சென்று தப்பிக்கொண்டன. ஆனால், மின்சாரம் செல்லும் ஒவ்வொரு முறையும் காவிற்பட்டு உடல் நடுக்கத்தை உண்டாக்க, அவை மெல்லமெல்ல இருட்டடைந்த பாதையால் வெளியேற ஆரம்பித்தன. முதல் தலைமுறையில் 125 பிழைகள்விட்ட எலியின் 23-ம் சந்ததியில் 25 பிழைகள் மாத்திரந்தான் விடப்பட்டனவாக அவர் கண்டார். இப்பழக்கம் ஈற்றில் ஒரு இயல்பூக்கமாகவே மாறலாம் என்றும் அவர் கூறியுள்ளார். ஆனால், எல்லாச்சாதி எலிகளுக்கும் இது வருமா? இந்த எலி, சாதாரண எலியோடு சேர்ந்து பெறும் குட்டிக்கும் இதன் இயல்பூக்கம் காணப்படுமா? அது கட்டாயம் குறைவுபடும். இவற்றை ஆழ்ந்து ஆராய்வோம்.

இதனாற் சூழலும் பரம்பரையும குழந்தைகளைப் பாதிப்பதைக் காண்க.

# வித்தகக் காதல்

பண்டிதர் சோ. இளமுருகனார்

கலைமாச் செல்வி! கலைமாச் செல்வி!!
அலைநீ ரிலங்கை யணிநகர் நிறீஇய
விலைமதிப் பறியாக் கலைமணித் தவிசிற்
செம்மாந் திருந்தே யம்மநீ யெற்கு
முலவாக் கலைமை யொண்பொரு டருஉங்
கலைமாச் செல்வி! கலைமாச் செல்வி!!
எத்திறம் மிக்க வித்தகத் திருவனை
மெய்த்திறக் காதலின் விழைகுவை யம்ம!!
ஐந்திணை சான்ற வகப்பொருண் மரபுநீ
யறியாய் கொல்லோ வறியாய் கொல்லோ
ஐம்புலச் செம்மையு மொருபுலத் தமையும்
ஆங்க ணன்றே வோங்குதமிழ் கூறுந்
தெய்வக் காதற் றிருமணம் நிகழும்;
காணுக் கேளாக் கருதா வொருமகன்
ஆறுபத் துறழ்ந்த நூறுகற் காணும்
சேணிட மிருந்துநின் காதலை யிரப்பின்
அதுதான்,
மாணுப் பெருந்திணை வழித்தா கும்மே;
தன்னரசு கண்ட நின்னக ரீழத்து
உருவினுந் திருவினு மொண்கலைப் பொருளினும்
மருவிய காதன் மாண்பினும் நின்னொடு
சாலவு மிணங்கித் தகைமேம் படுஉம்
ஈடு மெடுப்பு மில்லாத் திருவனைப்
பீடார் கருமுகில் பிறங்கிடும் வண்ணனை
மேற்றிசை காணுக் கீழ்த்திசைக் கலைஞனை
மலைவளர் பொழில்தொறும் வண்டினந் தொகுத்த
பெருந்தே னிருஅல் விருந்தெனக் கண்டும்
மறுபுலம் புகுந்தே யருவிலை கொடுத்துச்
சிறுதேன் கொள்ளும் பெருவளம் பதியில்
அடியோர் மறவா வருட்பெய ரோனைக்
கண்ணார் மணியினுங் கருத்தினும் வைத்தியாற்
பண்ணார் காதல் பழுநி
விண்ணா ரின்பம் நண்ணுவை விரைந்தே.

கம்பரும் வான்மீகியும்

# இராமன் அனுமனைப் புகழ்தல்

அனுமன் சுக்கிரீவனைப் பற்றியும் தன்னைப்பற்றியும் கூறி முடித்தவுடன், இராமன் அவனது ஆற்றலையும், நிறைந்த அறிவையும், கல்வித் திறனையும் தனக்குள் மெச்சிக் கொண்டு இலக்குவனிடம் கூறுகிறான்.

> ஸசிவோயம் கபீந்த்ரஸ்ய
> ஸுக்ரீவஸ்ய மஹாத்மந:
> தமேவ காங்க்ஷமாணஸ்ய
> மமாந்திக மிஹாகத:

'வானர வேந்தனும், மகாத்மாவுமான சுக்கிரீவனுடைய மந்திரி இவன். அவனைக் காணவேணுமென்று வந்துள்ள என்னிடம் இவனாக வந்துள்ளான்.'

> தமப்யபாஷ ஸௌமித்ரே
> ஸுக்ரீவ ஸசிவம் கபிம்
> வாக்யஜ்ஞம் மதுரைர்வாக்யை
> ஸ்நேஹ யுக்த மரிந்தமம்.

'ஏ ஸௌமித்திரை மைந்தனே, சுக்கிரீவ மந்திரியும், பகைவரை வெல்லுந் திறனமைந்த இவ்வானரனுடன் நீ உரையாடலாம். இவன் பேசுவதில் வல்லவன். இனிமையான வார்த்தைகளால் அன்பு செறிய இவனுடன் நீ பேசு.'

மேலும் இராமன் தம்பியிடம் சொல்லுகிறான்:

> நாக்ருக்வேத வினீதஸ்ய
> நாயஜுர்வேத தாரிண:
> நாஸாமவேத விதுஷ:
> சக்யமேவம் ப்ரபாஷிதும்.

[illegible] தை மனதிற் றரிக்காமலும், சாம வேதத்தைப் படித்து உணராமலும், இவன் இவ்வாறு பேச வியலாது.'

> நூநம் வ்யாகரணம் க்ருத்ஸ்நம்
> அநேந பஹுதாச்ருதம்
> பஹு வ்யாஹரதா அநேந
> நகிஞ்சிதப சப்திதம்.

... கே. எஸ். கே. ...

'இவன் நிச்சயமாக வியாகரணம் முழுவதையும் நன்றாகப் படித்துக் கேட்டிருக்க வேண்டும். இவ்வளவு பேசியும் சிறிதுகூட அவச்சொல் ஏற்படவில்லை.'

இவ்வாறு இராமன் அனுமனது அறிவின் மேன்மையைப் பாராட்டுகிறான். கம்பரும் இராமன் வாயிலாகப் புகழுகிறார்:

> 'இல்லாத உலகத் தெங்கும்
> ஈங்கிவன் இசைகள் கூரக்
> கல்லாத கலையும் வேதக்
> கடலுமே யென்னுங் காட்சி
> சொல்லாலே தோன்றிற் றன்றே!
> யார்கொல்? இச் சொல்லின் செல்வன்!
> வில்லார்தோள் இளைய வீர!
> விரிஞ்சனோ? விடைவலானோ?'

அனுமனை விரிஞ்சனோ, விடைவலானோ என்று இராமன் புகழுகிறான். விரிஞ்சன் வேதபாரகன். விடைவலான் வியாகரண கருத்தா. இவ்விரண்டு அடைமொழிகளால் மேலே கொடுத்துள்ள வான்மீகியினது இரண்டு சுலோகங்களின் கருத்து மிகவும் அழகாகக் கூறப்பட்டது. 'இவ்வளவு தூரம் பேசியும் சிறிதுகூட இவன் அபசப்தம் பிரயோகிக்கவில்லை' என்ற வான்மீகியின் வாக்கியார்த்தத்தைக் கம்பர், 'சொல்லின் செல்வன்' என்று அழகாக அமைத்தார்.

இராமன் லக்குவனிடம் மேலும சொல்லுகிறான்:

> 'மாணியாம் படிவ மன்று
> மற்றிவன் வடி வமைந்த
> ஆணியிவ் வுலகுக் கெல்லாம்
> என்னலா மாற்றற் கேற்ற
> சேணுயர் பெருமை தன்னைச்
> சிக்கறத் தெளிந்தேன், பின்னர்க்
> காணுதி மெய்ம்மை யென்று
> தம்பிக்குக் கழறிக் கண்ணன்'

'இவன் கேவலம் பிரமசாரியல்ல. இவன் தேருக்கு அச்சாணி போன்றவன். இவனுடைய பெருமையைத் தெளிவாகத் தெரிந்துகொண்டேன். நீயும் பின்னால் காணுவாய்.

அனுமானுடைய தூதலக்ஷணங்களை இராமன் புகழுகிறான்:

> ஏவம் குண கணைர் யுக்தா
> யஸ்ய ஸ்யு: கார்ய ஸாதகா:
> தஸ்ய ஸித்யந்தி ஸர்வே அர்த்தா:
> தூத வாக்ய ப்ரசோதிதா:

'எந்த அரசனுக்கு இவ்வாறான செயலாளர்கள் இருக்கிறார்களோ, அவனுக்கு அந்தத் தூதுவர்களுடைய பேச்சுத்

(தொடர்ச்சி 4-ம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கிழக்குத் தபால் ❋ ❋ நமது நிருபர்

# திரிகோணமலைச் செல்வாக்கு

கிழக்கு நாடுகளில் அழகு மிக்கதும் இயற்கையாக அமைந்துள்ளதுமான துறைமுகம் திருகோணமலை. இச் சிறப்புக் காரணமாகத்தான் சென்ற யுத்தத்தின் போது பாதுகாப்புக்கும் படையெடுப்புக்குமான ஏற்பாடுகளை இங்கு ஆங்கில அரசினர் ஆரம்பித்தார்கள் இதனுற் பல்லாயிரக்கணக்கான தொழிலாளருக்கு வேலையும் கிடைத்தது. இதே துறைமுகச் செல்வாக்குக் காரணமாக அரசாங்கம் அமைக்கவிருக்கும் பயனைத் தொழிற்சாலை திருகோணமலைப் பகுதியில் இடம்பெறக் கூடும். திருகோணமலை—கண்டி வீதியில் ஓரிடத்தில் இத்தொழிற்சாலையை அமைக்க உத்தேசித்திருக்கிருர்களாம். இத்தொழிற்சாலைக்கு வேண்டிய விறகைப் பெறுதற்கான காடு இப்பகுதியில் இருப்பதும், உற்பத்தி செய்யும் பயனையை ஏற்றுமதி செய்யப் புகையிரத வசதியிருப்பதும் மற்றொரு காரணமாம். இத்தொழிற்சாலை இப்பகுதியில் அமைக்கப்படுமானுல் இப்பகுதியிலுள்ள வேலையற்ருேருக்குத் தொழில் கிடைப்பதுடன், உற்பத்தியாக்கும் பயனையினுல் கிழக்கு மாகாண விவசாயம் மேலும் விருத்தியடையவும் ஏதுவாகும்.

## திருகோணமலையில்

இங்குள்ள பட்டின சபையில் 23 பிரேரணைகள் முன்னறிக்கை செய்யப்பட்டிருந்தனவாம். ஆனுல் ஒன்றே ஒன்று தான் நிறைவேறியதாம். மிகுதியான வற்றிற் சில விவாதத்தில் முடிந்தன. வேறு சில நீக்கிக்கொள்ளப்பட்டன வென்றும் தெரிகின்றது. இப் பட்டினசபை சென்ற வருடம் ஸ்தல ஸ்தாபன மந்திரி பண்டாரநாயகா அவர்களைக்கொண்டு ஒரு மணிக்கூண்டுக் கோபுரத்திற்கு அஸ்திவாரமிட்டது. ஆனுல் இன்றுவரை கோபுரம் எழும்பவில்லை. இது வரியிறுப்போருக்குப் பெரும் ஏமாற்றத்தை அளித்துள்ளது.

## மீன்பிடி மந்திரி விஜயம்

மீன்பிடி மந்திரி ஜி. ஜி. பொன்னம்பலம் தமது பத்தினியாருடன் இப்பகுதிக்கு விஜயம் செய்ய விருக்கிருர். இவர் 28, 29, 30-ந் திகதி ஆகிய மூன்று தினங்களிலும் மட்டக்களப்புப் பகுதியைச் சுற்றிப் பார்ப்பார்கள். அத்துடன் பொதுக் கூட்டங்களிலும் மந்திரியார் பேசுவார். இவையனைத்தையும் விட சனங்கள் ஆவலுடன் எதிர்பார்ப்பது தங்கள் குடிசைத் தொழில்களை அபிவிருத்தி செய்வதற்கும், மீன் தட்டுப்பாட்டைப் போக்கவும் எவ்வகையில் உதவுவாரென்பதேயாகும். டேனிஸ் நிபுணர்கள் இலங்கையின் மற்றப்பகுதிகளைப் பார்த்து விட்டமையால் அவர்களெவரையும் இங்கு மந்திரி அழைத்து வருவார் போலத் தோன்றவில்லை. 'இன்னு செய்தாரை ஒறுத்தல் அவர் நாண நன்னயஞ் செய்துவிடல்' என்றபடி நமக்குக் குண்டெறியக் குறி பார்த்து யப்பானியரைக் கூட்டி வந்து இப்பகுதிக்கு அனுப்பலாம்.

சுதந்திர விழாவிற் கலைக் காட்சியை ஏற்பாடு செய்த டொக்டர் மல்லசேகர மட்டக்களப்புக்கு விஜயஞ் செய்து மீண்டபின் எழுதிய கட்டுரையில் மட்டக்களப்புப் புடவை நெய்வதில் பெற்றிருந்த உயர்ந்த ஸ்தானத்தைக் குறிப்பிட்டிருந்தார். அப்படிப்பட்ட உன்னத ஸ்தானம் வகித்த தறிகாரர் இன்று கவனிப்பார் அற்றுக்கிடக்கின்றனர். யுத்தத்தின் போது இவர்கள் தொழில் சற்று முன்னேற்றமடைந்திருந்தது. இன்று அவர்கள் வேறு தொழில் தேடுகின்றனர். மொரட்டுவை 'பெனியன்' களுக்கு இருக்கும் பாதுகாப்புக் கூட மருத முனைத் துவாய்க்கும், படுக்கை விரிப்புகளுக்குமில்லை. ஆஸ்பத்திரிகளுக்கும், மற்றும் அரசினர் தேவைகளுக்கும் வேண்டியவற்றை இந்த நெசவாளரிடம் பெற ஏற்பாடு செய்வதோடு நூலைச் சரசமான விலைக்குப் பெறவும் ஒழுங்குகள் செய்யப்படவேண்டும். இங்கு நீண்டகாலமாக நடந்துவரும் மற்றொரு தொழில் வெண்கலச் சாமான் செய்தலாகும். இது போரைதீவுப் பகுதியில் நடைபெற்று வருகின்றது. இத்தொழிலைப் புனருத்தாரணஞ் செய்ய வேண்டியது மிக அவசியமாகும். இவ்வேலையைச் செய்வதன் மூலம் இலங்கைக்கு வேண்டிய வெண்கலச்சாமான்களை இங்கே தயாரித்து விடலாம். அடுத்த முக்கியமான விஷயம் கடதாசித் தொழிற்சாலையாகும். இத்தொழிற்சாலைக்கு வேண்டிய மூலப்பொருளான புல்லும், வைக்கோலும் இப்பகுதியில் ஏராளமாகக் கிடைக்கும். இதுவும் உடனே அமைக்கப்படவேண்டும். இவ்வேலைகளை மந்திரி தாமதமின்றிச் செய்து வைப்பாராயின் இப்பகுதிமக்கள் தமிழன் என்று சொல்லித் தலை நிமிர்ந்து நிற்பார்கள்!

## எருவில் எதிரொலி

கிராமசங்கத் தேர்தல் எதிரொலியினுல் எருவில் கிராமத்திற் சிலகுடும்பங்கள் பட்டகஷ்டத்தைச்சென்றமுறை எழுதினேன். இவ்வெதிரொலி இத்தோடு நில்லாது, அங்குள்ள மெதடிஸ் மிஷன் பாடசாலைக்குள்ளும் நுழைந்திருக்கிறதாம். ஐந்து ஆசிரியர்களைக் கொண்ட இப்பாடசாலைக்கு ஒருவாரமாக ஒரு பிள்ளைகளும் செல்லவில்லையாம். பின் அம்மாணவர்களின் குதூகலத்தைக் கேட்பானேன். ஒரே கொண்டாட்டந்தான். இப்படிப் பிள்ளைகள் படிப்பில்லாமல் இருக்க அனுமதித்தால் அவர்கள் பின்னர் திண்டாடவேண்டி நேரிடும் என்பதைப் பெற்றோர்கள் கவனிப்பார்களாக.

## 'நிலம் வேண்டுமா?'

இத்தலைப்புடன் இலங்கை சமாசாரப்பகுதியினர் ஒரு பிரசுரத்தை வெளியிட்டிருக்கின்றனர். அதிற் காணப்படும் சில புள்ளி விபரங்கள் மிகக் கவர்ச்சியானவை. அவ்விபரத்திற் கிராம விஸ்தரிப்புக்காக அநுராதபுரத்தில் 73,697 ஏக்கர் ஒதுக்கப்பட்டிருப்பதாகக் குறிப்பிடப்பட்டுள்ளது. ஆனுல் மட்டக்களப்புக்கு 1633 ஏக்கரும், திருகோணமலைக்கு 999 ஏக்கருமே ஒதுக்கி யுள்ளனர். மத்திய வகுப்பினர் உபயோகத்திற்கு மட்டக்களப்பில் 300 ஏக்கரும் திருகோணமலையில் 56 ஏக்கரும் ஒதுக்கப்பட்டுள்ளதாகவும் இத்தகவல் தெரிவிக்கிறது. மேற்குறித்த பூமிகள் எந்தெந்தக் கிராமங்களில் உள்ளன என்ற தகவல் எதுவும் இதிலே காண்பதற்கில்லை. இங்ஙனம் பூமி தேவைப்பட்டவர்கள், மாகாண அதிபருக்கு விண்ணப்பித்தால் அவர் வேண்டிய விபரங்களை உதவக்கூடும். இப்போது ஒதுக்கப்பட்ட காணி போதாது என்பதைக் காணியற்றவர்கள் நிரூபிப்பார்கள் எனக் கருதுகின்றேன்.

## ஊர்ப்பெயர் ஆராய்ச்சி

தமிழ்ப் பேரறிஞர் ஆர். பி. சேதுப்பிள்ளை அவர்களின் ஊர்ப்பெயர் ஆராய்ச்சியைப் படிப்பவர்கள், அதனை எவ்வித எதிர்ப்பும் இல்லாமல் ஏற்கக்கூடியதா யிருக்கிறது. ஆனுல் முதலியார் பொன்னம்பலம் மட்டக்களப்புப் பெயர் சம்பந்தமாக ஆராய்ந்து கண்ட முடிபு வரவேற்கக் கூடியதாயில்லை. இவ்வளவு பெரிய வாவியை 'மடு' என வழங்கினர் என்பது ஏற்கக் கூடியதுபோறற் படவில்லை. ஆதலின் "மடுக்கலப்பு—மட்டக்களப்பாயிற்று" என்னும் அவர் கூற்று அறிஞர்களால் ஆராயப்படவேண்டியதாகும்.

## ஜனுப் ராசிக்

நான் சென்ற வாரத்தில் எழுதியவாறு இலங்கைச் சோனகர் சங்கத் தலைவர் ஜனுப் ஏ. ஆர். ஏ. ராசிக் அவர்கள் இங்குள்ள முஸ்லீம்களின் அழைப்பின்பேரிற் கிழக்கு மாகாணத்தைச் சுற்றிப் பார்க்க இசைந்துள்ளாராம். இவர் இதனைத் தொடர்ந்து வேறு இடங்களையுந் தரிசித்து வருவார். இந்த வேளையில் சோனகர்களுக்கு நல்ல பிரசாரஞ் செய்வதோடு அடுத்த பொதுத்தேர்தலுக்கும் (பிரதிநிதிகள் சபை) வேண்டிய முன் ஏற்பாடுகளையும் செய்யலாமல்லவா?

## அரசடி வாழ்க!

நெடுங்காலமாகக் கல்வித் தொண்டாற்றிவந்த அரசடி தமது ஆசிரிய கலாசாலைக்குப் பின்னரும் தொடர்ந்து நற்பணியாற்றி வருகிறது. அது வெறும் புத்தகப் படிப்புடன் நில்லாது சில குடிசைக் கைத்தொழில்களையும் மாணவர்களுக்குப் பயிற்றி வருகின்றது. தனது தொழிற் கல்வித் திறனைக்காட்ட ஒரு கைப்பணிக் காட்சியையும் ஏற்படுத்தப்போகிறது. அத்துடன் நில்லாது, ஒரு பெரும் பரிசளிப்பு விழாவையும் நடாத்தவிருக்கின்றது. இக்கலாசாலை ஒருமாதத்தின்முன் நடாத்திய விளையாட்டுப் போட்டியானது ஆங்கிலக் கல்லூரிகளுக்கு எவ்வகையிலும் குறைந்தது என்று சொல்ல முடியாது. கைப்பணிக் காட்சிமூலம் அரசடி காட்டும் முன்மாதிரி பாராட்டற்குரியதாகும். அரசடி வாழ்க!




# இராமன் அனுமனைப் புகழ்தல்

(3-ம் பக்கத் தொடர்ச்சி)

திறமையினுல் எல்லாப் பொருளுங் கைகூடும. இந்தக் கருத்தைக் கம்பர், 'இவன் கேவலம் மாணியன்று. உலகத்துக்கெல்லாம் ஆணி' யென்று புகழுகிருர்.

அனுமானது சொல் வன்மையைப்பற்றி வான்மீகி,

அவிஸ்தாம் அஸந்திக்தம்
அவிலம்பிதம் அத்ருதம்
உரஸ்தம் கண்டகம் வாக்யம்
வர்த்ததே மத்யமஸ்வரே.

'சுருக்கமாகவும், ஐயந்திரிபில்லாமலும், தாமதமின்றியும், வேகமின்றியும், நெஞ்சிலிருந்தும், தொண்டையிலிருந்தும் மத்திம ஓசையில் இவனுடைய சொற்கள் அமைந்துள்ளன' என்று புகழுகிருர்.

ஸம்ஸ்கார க்ரம ஸம்பந்நாம்
அத்புதாம் அவிலம்பிதாம்
உச்சாரயதி கல்யாணீம்
வாசம் ஹ்ருதய ஹாரிணீம்.

'இலக்கண முறையைத் தழுவினதும், அற்புதமானதும், தாமதமில்லாததும், பொருள் நிறைந்ததுமான வார்த்தையைக் கேட்போரின் உள்ளம் உருகும்படி உச்சரிக்கிருன்.'

அநயா சித்ரயா வாசா
த்ரிஸ்தாந வ்யஞ்ஜநஸ்தயா
கஸ்ய நாராத்யதே சித்தம்
உத்ய தாஸேரரேரபி.

'விசித்திரமானதும், எடுத்தல் முதலிய மூன்று தானங்களைக் கொண்டதுமான இந்த வார்த்தையினுல், எவனுடைய மனதைத்தான் இவன் குளிரச் செய்யமாட்டான்! ஆயுதமேந்திய பகைவனுடைய மனங்கூட இவனது வார்த்தையால் மாறிவிடும்.'

இவ்விதமாக வான்மீகி புகழ்ந்ததைக் கம்பர், 'யார்கொல், இச் சொல்லின் செல்வன்' எனறும்,

மற்றும்இவ் வுலகத் துள்ள
முனிவர்வா னவர்கள் ஆர்இச்
சொற்றிற முடையார்! மற்றுச்
சுருதியின் தொகுதி யாவும்
முற்றறி தருமிம் மாணி
மொழிக்குஎதிர் முதல்வ ராய
பெற்றியர் மூவர்க் கேயும்
பேராற்றல் அரிது மன்னே!

என்றும் புகழுகிருர்.

அனுமனுடைய சொல்லிலிருந்து அவனுடைய நுண்ணிய அறிவை இராமன் வியந்து கூறுகிருன்:

ஏவம் விதோய ஸ்தயதூதோ
ந பவேத் பார்த்திவஸ்ய து
ஸித்யந்திஹி கதம் தஸ்ய
கார்யாணாம் கதயோ அநக!

'எந்த அரசனுக்கு இந்த விதமான தூதன் அமைந்திருக்கின்ருனே, அந்த அரசனுடைய காரியங்களின் போக்கு எவ்வாறு சித்தியடையாமலிருக்கும்?' இவ்வாறு இராமன் கூறியதால், சுக்கிரீவன் பாக்கியசாலி [illegible]ன்பதும், அவனுடைய காரியங்கள் எப்போதும் வெற்றிகரமானவையாயிருக்கும் என்பதும் பெறப்பட்டன. அனுமனது புத்தி சாதுரியம் எதனுல் தெரிந்ததென்ருல், இராம லக்ஷ்மணரைப் புகழுமுகத்தான் அவருடைய வரலாற்றை முழுதும் கேட்டுள்ளான். கம்பரும் வான்மீகியின் கருத்தை நோக்கிப்போலும், 'சேணுயர் பெருமை தன்னைச் சிக்கறத் தெளிந்தேன், பின்னர்க் காணுதி மெய்ம்மை' என்று கூறினர். அனுமனைத் தூதனுக்கிக்கொள்ளுதற்குரியவிருப்பத்தை இராமன் இங்கு குறிப்பிடுகிருன்.

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

ஆதாரக் கல்வி மகாநாடு—III

# அறிஞர்களின் அனுபவம்

**இரண்டாவது கட்டுரை**யில் மகாநாட்டு முதல் நாள் (மே. 7) நிகழ்ச்சிகள் ஆராயப்பட்டன. இக் கட்டுரையில் அடுத்த இரண்டு தினங்களில் நடைபெற்ற விஷயங்கள் ஆராயப்படும். தலிமி சங்கக் காரியதரிசி ஸ்ரீ அரியநாயகம் அவர்களின் அறிக்கையும், மாகாணங்களில் ஆதாரக் கல்வியின் நிலையை விளக்கும் அறிக்கைகளும் இரண்டாம் நாள் வாசிக்கப்பட்டன.

ஸ்ரீ அரியநாயகம் அவர்கள் முதலாவதாக ஆதாரக்கல்வியின் சரித்திரத்தைச் சுருக்கமாகக் கூறினர். காந்தியடிகள் முதன்முதல் 1937-ம் ஆண்டு யூலை மீ 31-ந் திகதி இவ் விஷயத்தைப் பற்றித் தமது பத்திரிகையில் எழுதினர். அடுத்தபடியாக காந்தியடிகளின் கருத்துக்களை ஆலோசனை செய்வதற்கு ஒரு சிறு மகாநாடு ஒக்டோபரிற் கூடியது. இம் மகாநாடு ஆதாரக்கல்வியின் அடிப்படையான கொள்கைகளை ஏற்றுக்கொண்டது. இந்தியாவில் முதலாவது ஆதாரக்கல்விப்பாடசாலை வார்தாவில் 1934-ம் ஆண்டு ஏப்றில் மாதம் ஆரம்பிக்கப்பட்டது. ஆகவே இப்பொழுது ஆதாரக்கல்வி பத்து ஆண்டுகளுக்கு நடைமுறையிலிருக்கின்றது. பத்து வருடத்தின் அனுபவம் காரணமாக ஆதாரக் கல்வியைப் பற்றிய சந்தேகங்களெல்லாம் நீங்கிவிட்டன. இனி ஆலோசிக்கப்படவேண்டிய விஷயங்கள் பாலர் கல்வி (Pre-Basic), ஆதாரக்கல்விக்கு மேற்பட்ட கல்வி (Post-Basic) முதியோர் கல்வி முதலியன.

இலங்கையிலும் ஆதாரக் கல்விக்கு அத்திவாரம்போடப்பட்டிருப்பதாக காரைநகர் ஸ்ரீ நவரத்தினம் தமது அறிக்கையிற் கூறினர். பம்பாய் பிரதிநிதி டொக்டர் சையுதீன் ஆதாரக் கல்வியை வளர்ப்பதற்கு, மாணவருக்கு உபயோகப்படக்கூடிய புத்தகங்கள் எழுதப்படவேண்டிய அவசியத்தைதெளிவாக விளக்கினர். அமெரிக்காவில் ஆதார விஞ்ஞானத்தை விளக்கி (Basic Science) 50 புத்தகங்கள் வெளிவந்திருப்பதாகவும் அவைபோன்ற நூல்கள் இந்திய மொழிகளில் எழுதப்பட்டால் மிகவும் பிரயோசனமாயிருக்கு மென்றும் கூறினர்.

ஆசிரியருக்கும் மாணவருக்கும் பயன்படக்கூடிய நூல்களை வெளியிடுவதில் தலிமி சங்கமும் ஏனைய ஸ்தாபனங்களும் ஈடுபடவேண்டுமென்பது மகாநாட்டுப் பிரேரணைகளில் ஒன்றாகும்.

### பீகார் அறிக்கை

மகாநாட்டிலே படிக்கப்பட்ட அறிக்கைகளில் மிமவும் முக்கியமானது ஸ்ரீ ஆர். எஸ். உபாத்தியாயராற் படிக்கப்பட்ட பீகார் மாகாணத்தைப் பற்றிய அறிக்கையாகும். இந்தியாவிற் பத்து வருடங்களுக்குத் தொடர்பாக ஆதாரக் கல்வி நடைமுறையிலிருந்தது பீகார் மாகாணத்தில்தான். காங்கிரஸ் மந்திரிகள் விலகி, தேசாதிபதிகள் ஆட்சிபுரிந்த காலத்தில் மற்ற மாகாணங்களிலெல்லாம் ஆதாரக் கல்வி கைவிடப்பட்டது. ஆனல் பீகார் மாகாணத்தில் தான் நடைமுறையிலிருந்தது. மேலும் மக்கள் பாடசாலைகளை ஸ்தாபிப்பதற்கு வேண்டிய நிலம் முதலியவற்றைக் கொடுத்துதவினர்.

இப்பொழுதும் ஆதாரக் கல்விக்கு மேற்பட்ட கல்வி சம்பந்தமான ஆராய்ச்சிகள் தீவிரமாக அங்கே நடைபெற்றுவருகின்றன. இப்பாடசாலைகள் 30 ஏக்கர் விஸ்தீரணமுள்ள நிலங்களில் தாபிக்கப்பெற்று பலதிறப்பட்ட (multilateral) பயிற்சிகள் கொடுக்கும் இடங்களாக விளங்குகின்றன. இப்பாடசாலைகளிற் பயிலும் மாணவர் சம்பளங்கட்டியே படிக்க வேண்டும். ஆனல் இச் சம்பளத்தைப் பிறர் கட்டமுடியாது. மாணவர் தங்கள் உழைப்பினுல்தான் கட்டவேண்டும். மாணவர் நோய்வாய்ப்பட்டால் நோய்வாய்ப்பட்ட காலத்துக்குத் தக்கபடி சம்பளம் குறைக்கப்படும். இம் முறையை மறு மாகாணங்களும் பின்பற்றுமென்று நாம் எதிர்பார்க்கலாம்.

இம்முறையிற் கல்வி கற்றவர்கள் சாதாரண சர்வகலாசாலைகளிற் சேருவதினுல் அதிகம் பயன் பெறமாட்டார்கள். ஆகவே ஆதாரக் கல்விக்கொள்கைகளை அடிப்படையாக வைத்துக்கொண்டு நாட்டுப்புறங்களில் சர்வகலாசாலைகள் (Rural Universities) தாபிக்கப்படக் கூடுமென்று எதிர்பார்க்கப்படுகின்றது.

### பாலர் கல்வி

பல காரணங்களினுல் ஆதாரக் கல்வித் திட்டம் தயாரிக்கப்பட்ட காலத்திற் பாலர் கல்வியைப்பற்றி அதிகம் சிந்திக்கப்படவில்லை. ஆனல் இப்பொழுது இவ்விஷயம் பலருடைய கவனத்தைக் கவர்ந்திருக்கின்றது. தமிழ் நாட்டில் கஸ்தூரிபாய் நிதிநிர்வாகி ஸ்ரீமதி சவுந்தரம் இராமச்சந்திரன் காந்திக்கிராமத்தில் தான் பெற்ற அனுபவத்தை எடுத்துக்கூறினர். நற்பழக்கங்களைப் பாலருக்குப் பழக்குவது சுலபம். அவர்களுக்குக் கல்வியல்ல முக்கியம். புஷ்டியான உணவும், புத்திக்கூர்மையை வளர்க்கும் விளையாட்டுக்களே முக்கியம். மகாதேவ தேசாயின் மகன் ஸ்ரீ நாராயணனும் தனது அனுபவத்தைக் கூறினுர். தங்கள் பாடசாலையில் 6 வயதுக்கு முன்பு மாணவருக்கு எழுத்துக் கற்றுக் கொடுப்பதில்லை' இதைப்பெற்ருேர் அறியாமையினுல் எதிர்க்கின்றனர் என்றனர்.

ச. அம்பிகைபாகன்

கஸ்தூரிபாய் நிதி சம்பந்தமான ஸ்தாபனங்கள் பெண்கள் முன்னேற்றத்தோடு பாலர் கல்வியிலும் ஈடு படுவதாகத் தீர்மானித்திருப்பதாகத் தெரிகின்றது.

### கிருபளானி கருத்து

மகாநாட்டின் போது ஆச்சாரிய கிருபளானி குறிப்பிடத்தக்க ஒரு சொற்பொழிவை நிகழ்த்தினுர். அதில் மத்திய அரசாங்கத்தையும் மாகாண அரசாங்கங்களையும் கண்டித்தனர். அவர் பேச்சு ஒரேகிண்டலாக இருந்தது. ஆதாரக் கல்வியானது குடியரசின் கீழ்த்தான் செவ்வனே நடைபெற முடியும். ஆனல் இப்பொழுது செல்வந்தர் ஆட்சிதான் நடைமுறையில் இருக்கிறது. இதை முறியடிக்கவேண்டியது முதற் கடமையெனக் கூறி அவர் மேலுங் குறிப்பிட்டதாவது: ஆனல் மத்திய அரசாங்கம் இதற்கு உடன்படாது. சாதிக் கட்டுப்பாடுகளை நீக்குவது ஆதாரக்கல்வியின் ஒரு நோக்கம். அரசாங்கத்தார் நினைத்தால் ஒரே நாளிற் சாதிக்கட்டுப்பாடுகளை ஒழிக்கலாம்; ஆனல் அதற்கு அவர்கள் தயாரில்லை.

பிரார்த்தனைக் கூட்டத்தில் ஸ்ரீ கிருபளானியின் பேச்சுக்கு ஆச்சாரிய வினேபாஜி பதில் இறுத்தனர். மாசுமறுவற்றவர்கள் மத்திய அரசாங்கத்தில் மந்திரிகளாயிருப்பதால் அவர்கள் மீது நம்பிக்கை வைக்கவேண்டும். கல்விமூலம் புரட்சியை உண்டு பண்ணுவதே காந்தியடிகளின் நோக்கம். அரசாங்கத்தார் சில காரியங்களையே செய்யமுடியும். சாதிக் கட்டுப் பாட்டைச் சட்டங்கள் மூலம் நீக்கமுடியாது; மக்கள் உள்ளங்களில் மாற்றம் ஏற்படவேண்டும்.

### இலங்கையின் போக்கு.

ஆதாரக் கல்வி போன்ற இயக்கங்களுக்கும் இலங்கைக்கும் வெகுதூரம் என்பதை நாம் ஏற்றுக்கொள்ள வேண்டியதாகவிருக்கிறது. இலங்கை அரசாங்கத்தார் இம்மகா நாட்டுக்கு ஒரு பார்வையாளரை அனுப்பக்கூடச் சம்மதிக்கவில்லையாம் ஆனல் 'ரேுபல்' சல்லூரித் தலைவரை பெரும் பணச்செலவில் இங்கிலாந்து, அமெரிக்கா முதலிய நாடுகளுக்கு அனுப்பியுள்ளார்கள். இலங்கையை ஒரு குட்டி இங்கிலாந்தாக்க விரும்புவோர் இப்பொழுது ஆதிக்கத்திலிருக்கின்றனர். ஆனல் இந்நிலை நீடித்திருக்காது என்பது நிச்சயம்.

> ஆதாரக் கல்விபற்றி இலங்கையிலும் இந் நாட்களிற் பேசுகின்றனர். ஆனுற் சுதந்திரம் பெற்ற இலங்கையின் ஆட்சிப் பீடத்தில் உள்ளவர்களின் மனப்பாங்கு மேற்றிசைக் கலாசாரத்திலே தோய்ந்திருக்கின்றது. ஆகவே, ஆதாரக்கல்வி இலங்கை அரசினரின் கவனத்தை ஈர்க்குமெனத் துணிந்து கூற முடியாது. ஆனல் இந்நிலை நீடிக்கமாட்டாதென்பதைக் கட்டுரையாளரும் சுட்டிக் காட்டியுள்ளார். —ப-ர்.

## ஸ்ரீ அரியநாயகம்

வர்தா கல்வித்திட்ட நிபுணரும் ஹிந்துஸ்தானி தலிமிசங்கத்துச் செயலாளரும், இந்திய மத்திய அரசாங்கத்துக்கல்விப் பகுதி ஆலோசனைச்சபை அங்கத்தவர்களில் ஒருவருமானயாழ்ப்பாணத்து ஸ்ரீ E. W. அரியநாயகம் அவர்கள் தமது தகப்பனுருடன் வட்டுக்கோட்டையில் தங்கிநிற்கிறுர். அடுத்த மாதம் முற்பகுதியில் அவர் மீண்டும் வர்தாவுக்குப் பிரயாணமாவார்.

---

# வல்லரசுகள் சந்திப்பு

## ஜேர்மனியின் எதிர்காலம்

**நான்கு வல்லரசுகளின்** வெளிநாட்டு மந்திரிகளின் மகாநாடு பரிஸ் நகரில் திங்கட்கிழமை ஆரம்பமாயிற்று. [பிரிட்டன் வெளிநாட்டு மந்திரி: பெவின். அமெரிக்கா: டீன்எக்கிஸன். ருஷியா: விஷின்ஸ்கி. பிரான்ஸ்: ஷூமன்.] ருஷிய வெளிநாட்டு மந்திரி விஷின்ஸ்கி பேசும்போது தூரகிழக்கு ஒப்பந்தம் ஏற்படுத்துவதுபற்றி விவாதித்து முடிவு செய்யுமாறு கேட்டுக்கொண்டார். இது ஏனைய மந்திரிமாருக்கு மிகுந்த ஆச்சரியத்தை உண்டாக்கியது.

தூரகிழக்குப்பற்றிய விவாதத்தில் இந்தியா, பாகிஸ்தான், இலங்கை, அவுஸ்திரேலியா, நியூஸிலந்துபோன்ற சாம்ராச்சிய நாடுகள் கலந்துகொள்ளவேண்டி யிருப்பதால் அவ்விஷயம் சம்பந்தமாக விவாதிப்பதற்கு அது சமயமல்லவென பிரிட்டிஷ் வெளிநாட்டு மந்திரி பெவின் கூறினுர்.

கடந்த வாரம் இங்கு குறிப்பிட்டதுபோன்று பரிஸ் மகாநாட்டின் முக்கிய விஷயம் ஜேர்மனியின் நிர்வாகத்தைப் பற்றியதாகும்.

ஐக்கிய ஜேர்மனி ஒன்றை அமைத்து, நான்கு வல்லரசுகளும் அதை நிர்வகிக்க வேண்டுமென விஷின்ஸ்கி கூறிய யோசனைக்கு மகாநாட்டில் ஆதரவு இருக்கவில்லை. அதாவது பொட்ஸ்டாம் மகாநாட்டு முடிபுகளையே அவர் மீண்டும் வற்புறுத்தி நின்ருர்.

### பொட்ஸ்டாம்

இந்நிலையில், பொட்ஸ்டாம் மகாநாட்டைப்பற்றி அறிந்துகொள்வது நன்று. பிரிட்டன், அமெரிக்கா, சோவியத்து ருஷியா ஆகிய மூன்று வல்லரசுகளைக்கொண்ட இம் மகாநாடு 1945-ம் ஆண்டு ஜுலை 11-ந் திகதியிலிருந்து ஓகஸ்ட் 2-ந் திகதிவரை நடைபெற்றது. இதன் பிரகாரம்: (1) மத்திய ஜேர்மன் ஆட்சி சில காலம்வரை நடைபெருதிருக்கவேண்டும். (2) பேர்லினிலுள்ள ஐக்கியநாடுகளின் சங்கத்திடமே சகல நிர்வாக உரிமைகளும் ஒப்படைக்கப்படவேண்டும். (3) சகல ஜேர்மனியத் தொழில்களையும் கட்டுப்படுத்தவேண்டும் அல்லது நீக்கிவிடவேண்டும். (4) மத்திய ஜேர்மன் ஆட்சி ஒன்று நிறுவிய பின்னரே ஜேர்மனியுடன் சமாதானப் பேச்சுக்கள் நடாத்தவேண்டும்.

பொட்ஸ்டாம் மகாநாட்டில் நடைபெற்ற இம் முடிபுகளைத் தொடர்ந்து, லண்டனில் நடைபெறவிருந்த மகாநாட்டுக்கு பிரான்ஸ், சீனம் ஆகிய இரு நாடுகளையும் அழைக்க வேண்டுமென அன்று தீர்மானிக்கப்பட்டது.

### ருஷியா ஆசை

கிழக்கு ஜேர்மனியைச் சார்பு நாடாக்கிக்கொள்ள வேண்டுமென்ற ஆசை ருஷியாவைப் பிடர் பிடித்து உந்துகின்றது. கடந்த யுத்தத்தில் ருஷியப் படைகள் பிரவேசித்திருந்த நாடுகள் ருஷியாவின் சார்பு நாடாகிக்கொண்டே வருகின்றன. இப் பேராசை ருஷியாவுக்கு இருக்கும் வரை நிரந்தரமான அமெரிக்க—ருஷிய நட்பு ஒரு போதும் ஏற்படப்போவதில்லை. ஜேர்மனிமீது ருஷியா கொண்டுள்ள ஆசை நீங்குமாயின் ருஷிய—அமெரிக்க நல்லுறவு உருவாகுவதுடன் உலக சமாதானத்துக்கும் வழிவகைகள் காண்பது சாத்தியமாகும்.

ருஷியா பரிஸ் மகாநாட்டிற் பின்வரும் யோசனைகளைத் தெரிவிக்கக்கூடும். மேற்கு ஜேர்மன் ஆட்சிக்கும் கிழக்கு ஜேர்மன் ஆட்சிக்கும் சம அந்தஸ்து அளிப்பதுடன் மத்திய சமஷ்டி ஆட்சி பேர்லினில் அமையவேண்டும். (2) சகல துருப்புக்களும் ஒரு வருடத்தில் அகன்றுவிட வேண்டும். (3) ரூர்பிரதேசத்தில் ருஷியாவுக்கு ஓர் இடங் கிடைக்க வேண்டும். (4) மேற்கு ஜேர்மனிக்கு ஏற்றுமதி செய்ய அனுமதிக்கப்பட வேண்டும். பேர்லினிலுள்ள ஜேர்மனியர் வியாபாரத்தைக் கட்டுப்படுத்திக் கொளலாம். (5) மேற்கு ஜேர்மனிக்குங் கிழக்கு ஜேர்மனிக்கு மிடையே போக்குவரத்துத்தடைகள் இருக்கக்கூடாது.

## உலக விவகாரம்

### முக்கிய வேலை

ஜேர்மனி ஐக்கியம் பற்றியே பரிஸ் மகாநாட்டில் ஆராயப்படுமென முன்னர் கூறப்பட்டது. அதாவது மேற்கு ஜேர்மனியையும், கிழக்கு ஜேர்மனியையும்ஒன்றுபடுத்துவதே முக்கிய பணியாகும். மேற்கு ஜேர்மனியே கிழக்கு ஜேர்மனியிலும் பார்க்க நிலப்பரப்பிலும் ஜனத்தொகையிலும் கூடியது. மேற்கு ஜேர்மனியின் நிலப்பரப்பு 96,000 சதுரமைல்; ஜனத்தொகை ஏறக்குறைய நாலரைக்கோடி. கிழக்கு ஜேர்மனியின் நிலப்பரப்பு46,000 சதுரமைல்;ஜனத்தொகை ஒன்றரைக்கோடி.

கிழக்கு ஜெர்மனியில கொம்யூனிஸ்ட் ஆதிக்கமே நிலவுகின்றது. ஆகவே, இங்குள்ளவர்கள் மேற்கு ஜேர்மனியுடன் சேர்ந்து வாழ விரும்பினுலும் சோவியத்து ருஷியா அதற்கு இணங்க மாட்டாதென்பது திண்ணம்.

### ஷங்காய் வீழ்ச்சி

**உலகிலேயே** நான்காவது ஸ்தானம் வகிக்கும் ஷங்காய் நகரம், சீனத்துக் கொம்யூனிஸ்டுகளின் ஆதிக்கத்துக்குள்ளாகிக்கொண்டது. ஆசியாவிலே ஷங்காய் போன்ற மாபெரும் நகருக்கு இணையான நகரம் வேறெதுவுமில்லையெனச் சொல்லப்படுகின்றது.

(தொடர்ச்சி 8-ம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஈழகேசரி

சுன்னுகம், விரோதி, வை. ௧௫
— சாந்தி ஆண்டு 80 —

## ஊழல்கள் பெருகுதல்

எங்கு பார்த்தாலும் கைக்கூலியும் சூறையாடுதலும் சாதாரண தொழிலாய்விட்டன. அரசாங்கப் பகுதிகளில் மாத்திரமல்ல, வேறு அந்தரங்கத் துறைகளிலும் இந்த வியாதிகள் மிகவும் அதிகரித்துக்கொண்டே வருகின்றன. இவைகளை நீக்க அரசினர் செய்யும் எத்தனங்கள் — உபாயங்கள் யாவும் பயனளியாது போகின்றன. ஒளிவு மறைவாக ஒரு காலத்தில் நடந்துவந்த இந்த ஒவ்வாத இழிந்த செயல்கள் இப்போது பகிரங்கமாக நடைபெறுவது கண்கூடு. எத்தனையோ அரசாங்கப் பகுதிகளிற் கைக்கூலி வெளிவெளியாகவே வாங்கப்படுகின்றது. அதனைக் கொடுப்போரும் வாங்குவோரும் இதனைப் பெரிய தவருக நினைப்பதில்லை. சாதாரண முறையில் நடைபெறும் விஷயமாகிவிட்டது. இத்துடன் அரசாங்கப் பொதுப் பணத்தைக் கொள்ளையடிக்கும் பழக்கமும் மிகவும் பெருகிச் செல்கின்றது. ஆயிரம் ரூபாய் செலவிட வேண்டிய விஷயத்துக்குச் செலவாகும் அரசாங்கப் பணம் ஐயாயிரம் ரூபாயாகும். மிக உயர்ந்த உத்தியோகத்தர் தொடக்கம் ஆகக் குறைந்த சேவகன் வரையில் இந்த இழிந்த தொழிலுக்கு ஆளாக இருப்பவர் பலராவர். யாவரும் இதிற் கலந்துகொள்வதால் இந்தக் கொள்ளையடிகாரரை அறிந்துகொள்வதும் இலகுவன்று.

இப்போது, இலங்கையரசினர் இந்த ஊழல்களைத் தடுக்கப் புதியவோர் அரசாங்கப்பகுதி ஏற்படுத்தினுலோவென்று ஆலோசிக்கின்றனர். இதனை ஆதரிப்பவரும் பலராகின்றனர். இதனுல் உண்மையான பெரிய நன்மை ஏற்படுமோ என்பது எமக்குச் சந்தேகந்தான். கைலஞ்சம் பெறுதல், அரசாங்கப் பணத்தைச் சூறையாடல் முதலியவற்றைத் தடுத்தற்கென்று எந்த நாட்டிலும் அரசாங்கப் பகுதிகள் ஏற்படுவது கிடையாது. அரசாங்கத்தினர் பொதுவாக இவ்விஷயத்தில் மிக்க சாக்கிரதையாக இருக்க வேண்டியதுதான். நியமிக்கப்படும் உத்தியோகத்தர் பொதுவாக இந்த இழிந்த குணங்கள் உடையாரோவென்று நன்று சீர்தூக்கிப் பார்க்கப்படவேண்டும். மேலுத்தியோகத்தர்கள் நிதானமும் நேர்மையும் உடையவர்களாயிருப்பின் இந்த ஊழல்கள் ஏற்படக் காரணமில்லை. அரசினர் இற்றைக்கு இருபது முப்பது வருடங்கட்கு முன் உயர்ந்த உத்தியோகத்தரை நியமிக்கும் பொழுதெல்லாம் அவர்களின் பரம்பரை, தகுதி, ஆற்றல், குலம் முதலியவற்றை நன்கு நோக்கியே அதனை வழங்கினர். இப்போது அப்படியில்லை. முன்பின்னேக்காது உத்தியோகத்தர் நியமிக்கப்படுகின்றனர். அத்துடன் உத்தியோகத்தை நாடுவோரும் தமது சம்பளத்தைப் பெரிதாக நோக்குவதில்லை. மேல் வரும்படி அந்த உத்தியோகத்தின் பேரால் வருமோ என்பதுதான் கேள்வி. இவ்வாருன பரிதாப நிலையில் நமது அரசாங்கம் பாழடைந்து செல்வதைக் கண்டு வருந்தாதிருக்க முடியவில்லை.

அரசினர் இந்த ஊழல்களைத் தடுக்க ஓர் அரசாங்கப் பகுதியை ஏற்படுத்தின், அந்தப் பகுதியையும் இந்தக் கொடியநோய் பிடிக்காதுவிடுமென்று எப்படிக் கூறுவது? கைக்கூலி பெறுகின்ற உத்தியோகத்தரை வெருட்டி அவரிடம் இப்புதிய பகுதி உத்தியோகத்தர் கைலஞ்சம் வேண்டாதிருப்பாரா? வழக்கமாகக் கைக்கூலி பெறும் உத்தியோகத்தர்கள் யாவரும் இதைத் தடுக்க எழுந்த அரசாங்கப் பகுதி உத்தியோகத்தருக்குத் திறை கொடுக்க ஆரம்பித்து விடுவாரல்லவா? எனவே, நோயை நீக்கக் கொடுக்கும் மருந்தானது, அதனை நீக்குவதற்குப் பதிலாக ஆளையே கொன்றுவிடவுங் கூடும். ஆகவே அரசினர், மேலும் அரசாங்கப் பணத்தை அநியாயமாக விநியோகஞ் செய்வதன்றி ஏதாவது பெரிய நன்மையை இதனுற் பெறுவது முற்றுக அசாத்தியம். பிரிட்டிஷாரின் அரசியலில் ஆரம்பித்த இந்த இழுக்குகள் இப்போது மிகப் பரந்து பெருகித் தடுக்க வியலாத நிலையை அடைந்துவிட்டன. இவ்விஷயம் சாதாரணமாகத் தடுக்கப்படுவதன்று.

இலங்கை சுதந்திரத்தைப் பெற்று ஒருவருடத்துக்கு மேலாகியும், இன்னும் பொதுமக்களென்ன உத்தியோகத்தர்களென்ன இலங்கை தமது சொந்தநாடு, அரசாங்கம் தம்முடையது; நாட்டிற்கு வரும் நட்டங்கள்சேமங்களில் தமக்கும் பங்கு உள்ளது என்று உணர்கின்றுரில்லை. அரசாங்கத்தைத் தமக்குப் புறம்பாகவுள்ள ஸ்தாபனமாகக் கருதுகின்றனர். பிரிட்டிஷார் கையளித்து விட்டுச் சென்று விட்டாரென்பதை நினைப்பதில்லை. எவ்வளவுக்கு அரசாங்கப் பணத்தைச் சூறையாட வியலுமோ, 'எவ்வளவுக்குக் கைலஞ்சம் பெற வயதியோ அவ்வளவுக் கெல்லாம் தமது கெட்டித்தனங்களைப் பயன்படுத்திக் கொள்கின்றனர். இந்த உத்தியோகத்தரும் மற்றையோரும் நடத்தும் இழிந்த தொழில் நாட்டிற்கு நாளடைவில் எவ்வளவு பெருந்தீமையைக் கொண்டுவருவதாக விருக்கின்றது. சன்மார்க்கமும் நிதானமும் நேர்மையும் அந்தரங்கவாழ்வில் மாத்திரமன்று, அரசியல் வாழ்விலும் நிலைபெறச் செய்யவேண்டும். இலங்கை நம்முடைய நாடு; அரசாங்கம் நம்முடையது; அதற்கு வரும் நட்டம் நயம் நம்மையே பாதிக்கும் என்று ஒவ்வொருவரும் எண்ணினுற்ருன், நமக்கும் நமது நாட்டிற்கும் மீட்சியுண்டு. மேலும் பொறுப்பும் கணிசமுமுள்ள உத்தியோக பதவிகட்குப் பலவித தகுதியும் குணங்களும் நிறைந்த பெரியோரையே நியமிக்கவேண்டும். அரசாங்கம் மேலிருந்துதான் தூய்மையடைய வேண்டும். பிரதிநிதிகள் சபை அங்கத்தினர், மந்திரிமார், அரசாங்கப்பகுதித் தலைவர்கள் தம்மைத் தூய்மைப்படுத்தி நேர்மையாக நடந்துகொள்ளின், கைலஞ்சம் முதலிய ஊழல்கள் விரைந்து நீங்குமென்பதே எமது திடமான அபிப்பிராயம்.

## சேர்ச்சில் விநோதம்!

பிரிட்டிஷ் ஏகாதிபத்தியக்கோட்டையைத் தாமே தாங்கி நிற்பதாக சேர்ச்சில் துரை நினைந்துவந்தார். இப்போது இவர் அடைந்த நிலையையும் மனமாற்றத்தையும் நோக்குமிடத்து, எவர்தான் அற்புதமடையார்? உலகம் முழுவதையும் பிரிட்டிஷார் என்றும் அடக்கியாள வந்தவரென்பது இந்தப் பிற்போக்குவாதியின் உறுதியான மனப்பான்மை. மற்றைய சிறிய நாடுகள் யாவும் என்றும் அடிமையாக விருக்க[illegible]தன என்பதும் இவர் [illegible]த்து. யுத்தம் முடிவடைந்தவுடன் இந்தப் பெரிய தலைவர் அடைந்த வீழ்ச்சியும் அரசியலில் ஏற்பட்ட மாற்றங்களும் இவரை மாத்திரமன்று, இன்னும் பலரையும் பிரமிக்கச்செய்துவிட்டன. ஒன்றன்பின் ஒன்ருக பிரிட்டிஷ்குடியேற்றநாடுகள்சுதந்திரத்தைப் பெற்றுப் பிரிட்டிஷாரின் பிடியிலிருந்து விலகிவிட்டன. இது, காலத்தின்கோலமென்பதை உணராது, சேர்ச்சில் துரை பிழையாக விளங்கித் தொழிற்கட்சியரசினரை அநியாயமாக வைதனர். ஆனுல் இப்போது தொழிற்கட்சியரசினர் செய்தன யாவும் முற்றுகச் சரியென உணர்கின்றனர். இந்தியாவின் நன்மைக்காகவே அந்நாட்டினை அரசு செய்யக் கடவுளால் பிரிட்டிஷார் அனுப்பப்பட்டவரெனக் கூறிவந்த இப்பிரபு, இப்போது தலைகவிழ்ந்து நிற்கின்றுர். இவரடைந்த இறுமாப்புக்கு எல்லையுண்டா? இந்தியத் தலைவர்களை இடைவிடாது தூஷித்தார். அங்குள்ள வகுப்புத் துவேஷத்தை மலையளவாக்கிப் பகிரங்கப்படுத்தினுர். மகாத்மா காந்தி முன்னர் லண்டன் சென்றபொழுது கண்ணுற் பார்க்கவும் மறுத்தாரே? அரை நிர்வாணி, பைக்கிரி என்று அவரை வாய்க்கு வந்தவாறு இகழ்ந்தவரும் இவரல்லவா? இப்போது இந்த மகான்தான் இந்தியா வேண்டாமென்று பிரிந்து சுதந்திரக் குடியரசு நாடாக இருக்கவேண்டுமென்று மன்ருடிப் பிரிட்டிஷாருடன் தொடர்பு வைத்துக் கொள்ளும்படி கேட்பவர். லண்டனில் தேடிப் பிடித்து அன்புடன் வருந்தியழைத்துப் பண்டிதர் நேருவுக்கு விருந்தளித்தனர். இப்படியெல்லாம் இவரின் காலத்தில் நடப்பது மிக விநோதமாகின்றது. முற்பகல் செய்யின் பிற்பகல் விளையுமென்பது இவர் பேரில் நன்கு வெளியாயிற்றே. இந்தியாவின் பரம சத்துருவாக நின்று எத்தனையோ குறும்புகளையும் நட்டங்களையும் செய்த இவர் இப்போது பரிந்து நின்று மன்ருடி இந்தியாவின் நட்பினை ஆவலாக நாட வேண்டியதாயிற்றே!


## உயரப் பறத்தல்

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

### 'லேக் ஹவுஸ்' செய்தி

'சிலோன் டெய்லிநியூஸ்' போன்ற இனப் பத்திரிகைகள் 'லேக் ஹவுஸ்' என்ற காரியாலயத்தில் இருந்து வெளியாகின்றன. இப் பத்திரிகைகள் சிங்களரின் நன்மைக்காக நடாத்தப்படுகின்றன. அத்துடன் இங்கிருந்து வெளியாகும் தமிழ், சிங்களத் தினசரிகளும் சிங்களமக்களின்பிரசாரங்களைச்செய்து வருகின்றன. முஸ்லீம் மக்களின் ஆதரவுடன் நடைபெறும் "லேக்ஹவுஸ்!' தமிழ்ப் பத்திரிகை இப்போது சில மாதங்களாக தமிழ்ப் பண்பாட்டிலும் அக்[illegible] [illegible] பத்திரிகை காரியாகக் கத்தினுலும் தமிழ் மக்களின் உரிமைகளையோ, பண்பாட்டையோ பாதுகாக்குமென எவரும் நம்பி ஏமாற வேண்டியதில்லை.

தமிழரின் உரிமைக்காகக் கொக்கரித்த ஒருவர், தமிழ்ப் பிரதிநிதி ஒருவரின் உதவியுடன் இந்த 'ஏரிஇல்ல'த்தில் நுழைந்துகொண்டு இப்போது அந்த மந்திரி செய்வது சரியென்று பத்திரிகையிற் பிரசாரஞ்செய்கின்றுராம். பண்டிதர் என்றும் பத்திரிகை நிபுணன் என்றும் சொல்லி எத்தனை நாட்களுக்கு ஏமாற்றிக் காலங்கழிப்பது? இடையிடையே இப்படிச் சிலஉண்மைகளை எழுதுவேன்.




ஈரனகத்தின் மத்தியிலே, பாழடைந்து கிடக்கும் பழைய மன்னர்களின் புராதன கட்டடங்களைப் பிரதிநிதிகள் சபையின் அங்கத்தினர் சிலர் சமீபத்திற் பார்த்தனர். சிங்களரும் தமிழரும் சேர்ந்த இக்கோஷ்டியிற் பரஸ்பர முகஸ்துதிகள் பரிமாறப்பட்டன. அழிந்த நகரங்களைக்கண்டு குதூகலமடைந்த இப்பிரதிநிதிகள் நாட்டின் தூண்களாகவும் விளங்குகின்றனர். இலங்கைக்குப் பாரம் அதிகரித்தால் இத்தூண்களும் சிலவேளை சரிந்துவிடக்கூடும். இதை உணர்ந்து போலும் இங்குள்ள சில புதிய தூண்கள் இந்தியர்களைத் துரத்திவிடப் பார்க்கின்றன. அப்படியானுல் இலங்கையின் பாரம் குறையுமென அவர்கள் கருதுகின்றனரா?

### வானெலி நிபுணர்

கொழும்பு வானெலித் தமிழ் நிகழ்ச்சிகளைச் சீர்திருத்தி ஆலோசனைகள் கூறுவதற்காகச் சென்னை அடையாறிலுள்ள கலாக்ஷேத்திரத்தின் தலைவர் ஸ்ரீநிவாசன் இலங்கைக்கு வருகின்றுர், அவரை வரவேற்கின்ருேம். நிற்க, இதுபற்றிக் கொழும்பிலுள்ள தமிழ்த் தினசரி ஒன்றிலேபின்வருமாறு காணப்படுகின்றது.

"தமிழ்ச் சங்கத்தினதும் சம்பாஷணைகளினதும் மதுரத்தை உயர்த்துவதே இந்த விசாரணையின் நோக்கம் புரபெசர் ஸ்ரீனிவாசன் தமிழ்ப் பாடகர்களைப் பரிசோதித்து இனமினமாகப் பிரிப்பார்"

சம்பாஷணைகளின் மதுரத்தை உயர்த்துவதற்குத் தரத்தை உயர்த்துவதும் ஒரு வழி. அதேபோன்று சங்கீதத்தையும் மதுரமாக்கலாம். இனி, தமிழ்ப் பாடகர்களை இன மினமாகப் பிரிக்கும் போது, சிங்கம், புலி, கரடி, கழுதை என்பன இடம்பெறக் கூடாது. இவ் வன விலங்குகள் 'ரேடியோ'வில் மதுரமாகப் பாடினுற் கூட ஒருவரும் கேட்கமாட்டார்கள்.

### மூளைப்பலம்

லண்டனிலுள்ள பொது மக்கள் சபையிலும் வேறு இடங்களிலுமுள்ள அரசியற் சபைகளிலும் பிரதிநிதிகள் பலர் வாய் வீரம் பேசுவதுண்டு. சில சமயங்களில் இப் பேச்சுக்கள் வரம்புமீறி அடிபிடி சண்டையாகவும் முடிந்துவிடுகின்றன. சமீபத்தில் இலங்கை மந்திரி ஒரு மேற்சபை அங்கத்தவரைப் பற்றிப் பொதுமேடையிற் சரியாகக் கண்டித்துப் பேசியிருந்தார். இது அலைகடலுக்கு அப்பாலும் கேட்டதாம். குறித்த மேற்சபை அங்கத்தவர் நல்லகாலமாகப் பிரதிநிதிகள் சபையில் இடம் பெறவில்லை. இடம் பெற்றிருந்தால் யார் கண்டது, இருவரும் ஒருவேளை கைபரிமாறியிருக்கவுங்கூடுமல்லவா?

### சிங்களத்தீவில்

சிங்களத்திவு என்று சொல்லப்படும் இலங்கையிலே, இப்போது சொந்தப் பண்பாட்டைப் பற்றிப்பேசிப் பெருமை கொள்வது வழக்கமாகிக் கொண்டது. சிங்களச் சகோதரர்களே இதில்மிக அக்கறையுள்ளவர்களாகக் காணப்படுகின்றனர்.

போதாக்குறைக்குப் புதைபொருள் ஆராய்ச்சிப் பகுதியினர் எதைத்தோண்டியெடுத்தாலும் அவற்றிலெல்லாம் சிங்களக் கலாசாரமே புதைந்து கிடக்கின்றன. பழைய காலத்துச் சிங்கக் கொடியொன்று செப்புப் பெட்டிக்குள்ளே கிடந்து வெளிக் கிளம்புமாயின் இலங்கைத் தேசியக் கொடிப் பிரச்சினையும் தீர்ந்து கொள்ளும்.

### மட்டக்களப்பில்

சமீபத்தில் மட்டக்களப்புப் பக்கம் பௌத்த பண்பாட்டு வேட்டையாடச் சென்ற தேசிய நூதனசாலைகளின் அதிகாரி, கீழ்மாகாணத்திலும் பௌத்தமதம் பரவிவந்திருப்பதாக ஆதாரத்துடன் கூறுகின்ருர். கீழ்மாகாணப் பகுதியிற் பாழடைந்து கிடக்கும் பௌத்த கோயிற் சுவாகளில் உள்ள ஓவியங்கள் இத்தனைக்கும் சான்று பகர்வதாகவும் அவர் தெரிவிக்கின்ருர். இங்கு காணப்படும் ஓவியங்கள் பொலனறுவையில் உள்ள சுவர்ச் சித்திரங்களைப் போன்றனவெனவும் அவர் நிரூபிக்கும்போது அவரை யார் என்னசெய்ய முடியும்?

### "பத்தினி"

சில சுவர்களிற் காணப்படும் கொத்து வேலைகளுக்கிடையே சிங்களப் பாடல்களும் தென்படுவதாக நூதனசாலைகளின் அதிகாரி கூறுகின்ருர். இவற்றுடன் வெங்கலத்தாற் செய்யப்பட்ட சிங்களப் பெண்ணின் ஓர் உருவமும் இருப்பதால் அவ்வுருவம் சிங்களர் போற்றிவரும் பத்தினியென அவர்முடிபுகட்டியுள்ளார். இனிஎனதுசொந்த ஆராய்ச்சிவருமாறு: இந்தப் பத்தினி தென்னிந்தியாவிலிருந்து இலங்கைக்கு விஜயம் செய்திருக்கவுங் கூடும். பத்தினி வழிபாடு தென்னிலங்கையிலும பரவியிருப்பதால் இது ஒருவேளை சிலப்பதிகாரத்து நாகரிகமாகவு மிருக்கலாமல்லவா?

### பத்திரிகைப் பலன்

இந்தியாவிலும், இலங்கையிலிருந்தும் வெளியாகும் ஆங்கில, தமிழ், வார வெளியீடுகளில் வாரப்பொதுப் பலன்கள் கூறப்படுகின்றன. ஒவ்வொரு பத்திரிகையும் ஒவ்வொரு விதமாக வாசகர்களுக்குச் சோதிடம் சொல்லுகின்றன. பத்திரிகைகளின் வாழ்க்கை, எதிர்காலம் என்பன வாசகர்களின் கைகளில், இருந்தகாலம் போய்—இப்போது வாசகர்களின் காலபலன் பத்திரிகைகளிடம் சிக்கிக்கொண்டிருப்பதும் ஒரு விந்தைதான்! இது மக்களின் தலையெழுத்து!!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கண்ணியம் பெற்ற நாடு

- இந்தியா -

## ஆந்திரர் கோரிக்கை

**புதிதாகச்** சுதந்திரம் பெற்ற இந்தியா இவ்வளவு விரைவாக உலகமே புகழக்கூடிய முறையில் உறுதிப்பாட்டினை அடைந்து வருவதைக் கண்டு மேலைத்தேசத்தவர் மிக்க வியப்படைகின்றனர். அமெரிக்காவின் அரசியல் நிபுணரொருவர் இந்தியாவின் அரசியல் வன்மையையும் பண்டிதர் நேருவின் இராசதந்திரத் திறமையையும் தக்கவாறு புகழ்ந்து பாராட்டினர். பர்மா, இந்தோனேஷியா, மலாயா முதலிய நாடுகள் சுதந்திரத்தைப் பெற்றும் அதைப் பாதுகாத்துக் கொள்ள வியலாது தத்தளிக்க இந்தியா மாத்திரம் இவ்விஷயத்திற் சித்தியுடன் முன்னேறிச் செல்வது அவர்கட்கு நூதனமாகின்றது. மிகக தீமையை வருவித்துவந்த வகுப்புத் துவேஷமும் தலைகாட்டாதிருக்க இந்திய அரசினர் வேண்டிய நடவடிக்கைகளை மேற்கொண்டனர். இந்தியாவில் இந்து-முஸ்லீம் கலகம், தீண்டாமை முதலிய ஊழல்கள் யாவும் ஓடி மறைகின்றன. அத்துடன் 500 சமஸ்தானங்கள் புதிய முறையில் இந்திய அரசாங்கத்துடன் இணைக்கப்படலாயின. நாட்டில் சமாதானம் நிலைபெறும்படி செய்யப்பட்டது. சாம்ராச்சிய நாடுகளுடன் புதிய முறையில் தொடர்பு வலுப்படுத்தப்பட்டது. இவ் வைபவங்கள் யாவும் இந்தியாவுக்குச் சர்வதேச அரங்கத்தில் பெரிய மதிப்பினையும் அதிகாரத்தையும் அளித்தனவாகும்.

### ஹைதராபாத்

இச்சமஸ்தான விஷயமாக ஐக்கிய நாடுகள் சங்கத்திற் பாகிஸ்தான் பிரதிநிதி ஜபருல்லாக்கான் வெளுத்துவாங்கினர். அநியாயமாக இந்திய அரசினர் இந்தச் சமஸ்தானத்தை நசித்துவிட்டனரென்பதே முறைப்பாடு. இந்த முழுப்பொய்யினை உலகம் நம்பலேமாட்டாது. ஹைதராபாத் இந்தியாவுக்குள் இருக்கும் ஒரு சமஸ்தானம். அது இந்தியாவுடன் தொடர்புடையது. இந்நாடு பூரண சுதந்திரமாக நிலைபெற இந்திய அரசினர் எப்படி இடங்கொடுப்பர்? மேலும் இந்நாட்டு விஷயமாகப் பாகிஸ்தான் பிரதிநிதி எதற்காக இவ்வளவு ஆத்திரமடைய வேண்டுமெனக் கேட்டால் அதற்கும் பதில் கூறப்படுகின்றது. தென்னாபிரிக்காவிலுள்ள இந்தியர்க்காக இந்தியா பரிந்துகொள்ளவில்லையா? இந்தோனேஷியமக்களுக்காக இந்தியா விவாதிக்கவில்லையா? ஹைதராபாத்துக்காகப் பாகிஸ்தான் ஏன் பேசக்கூடாது என்று கேட்கின்றனர். ஹைதராபாத் சமஸ்தானமும் இந்தோனேஷியாவும் ஒரு தன்மையதாகாது. ஹைதராபாத் சமஸ்தானத்துள் வசிப்போரை நிஸாம் அரசர் துன்புறுத்த இந்திய அரசினர் எப்படி இடங்கொடுப்பது? மேலும் இந்தியாவுக்கு நடுவில் ஒரு நாடு பூரண சுதந்திரத்துடன் நிலைபெற யாவர் இடங்கொடுப்பர்? முடிவடைந்துள்ள ஹைதராபாத் விஷயத்திற் பாகிஸ்தான் அரசினர் ஏன் இவ்வளவு தலையுடைக்கின்றனர். இச் சமஸ்தான மக்கள் எண்ணப்படி அரசியல் நடத்தப் போதிய ஆயத்தங்கள் செய்யப்பட்டிருக்கின்றன. நைஸாம் அரசினரும் அதற்கு உடன்பட்டுள்ளார்.

### ஆதாரமில்லை

இந்திய அரசினர் பாகிஸ்தானை தலைத்துவிட முயற்சிசெய்கின்றனர்என்ற பொய்ச்சாட்டுக்களைவிடாது பாகிஸ்தான் தலைவர்களால் வெளியிடப்படுகின்றன. இவைகட்கு எவ்வித ஆதாரமுங்கிடையா. இந்தியத் தலைவர்கள் இதை முற்றாக மறுத்தாலும் பாகிஸ்தான் அரசினர் கேட்கின்றாரில்லை இந்தியாவைப் பற்றிப் பொய்ப்பிரசாரங்கள் செய்வதால் ஒரு பயனுமில்லையென்று இப்போது வல்லபாய் படேல் ஓர் அறிக்கை வெளியிட்டுள்ளார். மேலும் பாகிஸ்தான் அரசினர் இந்தியாவைப் படையெடுத்து வெல்லலாமென்றுங் கருதுகின்றனர். இதற்கு மத்திய ஆசியாவிலுள்ள முஸ்லீம் நாடுகள் துணைபுரியுமென்றும் பாகிஸ்தான் கனவுகாண்கின்றது. இந்தியா கூறிடப்பட்டபோது முஸ்லீம்கள் நினைத்தபடி பாஞ்சாலம், வங்காளம் முதலிய நாடுகள் முற்றாகப் பாகிஸ்தானுக்குக்கிடைக்கவில்லை. இப்போது கிடைப்பதைப் பெற்றுக்கொண்டு பின் தமது இராணுவவல்லமையால் வேண்டிய நாடுகளைப் பிடிக்க வேண்டும் என்ற எண்ணம் அடிப்படையில் உண்டு. இந்தியா இவ்வித சேட்டைகட்கு உடன்படாதென்றும் தமது முழுப் பெலத்தை உபயோகித்துப் படையெடுத்து வருவோரின் திமிரை அடக்க என்றுந் தயார் என்றும் படேல் கூறிவிட்டனர். பாகிஸ்தான அரசினர் இந்தியாவுடன் சமாதானமாக வாழ விரும்பாவிடின் இரு நாடுகளும் அவலமடைய வேண்டியதுதான். சமாதானம் ஏற்படாவிடத்துப் பொருளாதார நிலையை எப்படிச் சீர்ப்படுத்துவதெனப் படேல் கேட்கின்றார். மேலும் பாகிஸ்தானின் முன்னேற்றத்தைத் தடுக்க இந்தியா ஒருபோதும் விரும்பவில்லை யென்றும், ஆனால் பாகிஸ்தானின் அடாத செயல்களைத் தாம் அங்கீகரிக்க வியலாதென்றுங் கூறினர்.

### ஆந்திரமாகாணம்

இம்மாகாண விஷயமாக அளவுகடந்த பூசல்கள் தோன்றியுள்ளன. இம்மாகாணம் புதிய அரசியற் சபை ஏற்படும்போது அமைக்கப்பட வேண்டின், சென்னை நகர் தமக்குக் கட்டாயம் இப்போது வேண்டும் என்னுங் கோரிக்கையைக் கிளப்பாதிருக்க வேண்டுமென ஆந்திர மக்களுக்குப் பட்டாபி சீதாராமய்யா முன்னரே கூறிவிட்டனர். இதனை அப்பொழுது ஆந்திர மக்கள் ஏற்காது மிக்க புகார்களை உண்டாக்கினர். இப்போது காங்கிரஸ் தலைவரின் வாக்கு மிகச்சிறந்ததென்பதை உணர்ந்து வருகின்றனர். சென்னை நகர் இப்போது இருந்தபடியே இருக்கும். ஆந்திர மக்கள் தமக்கென ஒரு மாகாணத்தைப் பெற்றுக்கொண்டு பின் சென்னை நகரைப் பற்றித்தமது உரிமையை நெருங்கிக் கேட்கலாம். இவ்விஷயம் பின் நன்கு ஆலோசித்து முடிவுசெய்யப்படும். இப்போது இந் நகரைப்பற்றி ஒன்றுங் கூறவியலாது. ஒருகால் இந்நகரம் தமிழருக்காவது, ஆந்திர மக்கட்காவது விடப்பட்டால் தனியொரு அரசியற் பிரிவாக வைத்துப் பரிபாலிக்கும் உரிமையும் இந்திய அரசினருக்கு உண்டு. ஆகையால் இந்த நகரைப்பற்றி விவாதித்து நிற்பதால் ஆந்திர மக்கள் தாம் சென்ற இருபது வருடங்களாகக் கோரி நிற்கும் விஷயத்தை இழக்க வேண்டிவரும். இப்போது அவசியம் ஏற்படவேண்டியது ஆந்திரமாகாணமே. அதைப் பெறின் பெருநன்மையாகும்.

# பழம்பெரும் சீனம்

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

### பழுதான கொள்கை

சீன மக்கள் பொதுவாகப் பௌத்த சமயத்தை மேற்கொள்பவராயினும், அனேகர் கொன்பியூசியஸ் என்றபெரிய போதகாசிரியரின் கொள்கைகளைத் தழுவிச் செல்பவராகக் காணலாம். வாழ்க்கை ஒழுங்குகள் மிகவும்கவனித்து ஓம்பப்படவேண்டுமென்பதைக் கொன்பியூசியஸ் கற்பித்துள்ளார். அத்துடன் சீன மக்கள் ஒவ்வொருவரும் தங்கள் தங்கள் சொந்த நன்மையிலும் சுதந்திரத்திலும் வேட்கையுடையராகக் காணப்படுகின்றனரேயன்றி, தேசீய நோக்குடையராய் நாட்டின் சேமலாபத்தில் அக்கறை காட்டி ஒற்றுமையாக உழைப்பதாகக் காணோம். இந்தப் பழுதான கொள்கைதான் இப்போது சீனத்துக்கு மிக்க ஆபத்தினை வருவித்துள்ளது. சுயநலமும் பிரிவினைகளுமே இங்கு நிலைபெற்று வருகின்றன. தலைவர்களாயுள்ளவர் தங்கள் தங்கள் எண்ணங்களை நிலைநாட்டப் பார்க்கின்றனரேயன்றித் தமக்கிடையிலுள்ள வேற்றுமைகளைப் புறத்தே விட்டு நாட்டின் நற்கதிக்குப் பிரதம இடமளித்து அதன் முன்னேற்றத்துக்கு உழைப்பவராகக் காணோம். இவர்களின் சுயநலம் சீனத்தின் பழைய நாகரிகத்தைக்கூட மறக்கும்படி செய்துவிட்டது. அரசியல் விஷயமாகவும் பொருளாதார விஷயமாகவும் இங்கு ஏற்பட்டுள்ள கலக்கங்களுக்கு எல்லையில்லை.

### கொம்யூனிஸம்

சீனத்தில்இப்போது கொம்யூனிஸம் மிகப்பரவி வருகின்றது. இந்தக்கொள்கை இங்கே நன்கு வேரூன்றி நிலைத்துவிடுமா வென்பது ஆராயத்தக்கது. இப்போது கொம்யூனிஸ்ட் கட்சியினர் தமது இராணுவ வன்மையாற் பெரிய வெற்றிகள் அடைந்து வருகின்றனர். ஆனால், சீன தேசமக்கள், தமது நாட்டிற் கொம்யூனிஸம் நிலைத்துவிடும் என்பதில் மிகவும் சந்தேகமடைகின்றனர். சீனர் பொதுவாகச் சுயநலத்தையே மேற்கொண்டவர். ஒவ்வொருவரும் தந்தம் சொந்த நன்மையையே இலக்காகக்கொண்டு வாழுபவர். இந்நிலையில் சமத்துவ வாழ்வைப் போதித்துச் செல்லும் கொம்யூனிஸம் இந்நாட்டில் வேரூன்றுமென்பது சந்தேகமான விஷயம். அமெரிக்காவும் பிரிட்டனும் இப்பெரிய நாடாகும் சீனம் சோவியத்து ருஷியரின் ஆதிக்கத்துள் அமையுமென நம்பவில்லை. அக்காரணத்தாற்றான் காலத்துக்கேற்ற போதிய உதவிகளைச் செய்யாது வாளாபார்த்துக் கொண்டிருக்கின்றனர் போலும்.

### பொருளாதார நிலை

அரசியல் நெருக்கடி ஒருவாறாகப் பொருளாதார நிலை சீனத்தில் மிக்க கேவலநிலையை அடைந்துள்ளது. சென்ற இருபது வருடகாலமாகச் சீனத்தில் யுத்தங்களும் கலகங்களும் நிகழ்ந்து வருவதை யாவரும் அறிவர். எனவே பொருளாதாரநிலை உறுதிப்படுமென எண்ணுவதெப்படி? சீனத்தின் பணநிலையும் மிக்க தளம்படியான நிலையிலுள்ளது. சீனத்தின் கடதாசி நோட்டுகட்கு மானமில்லை. அமெரிக்க டொல்லர் ஒன்று இரண்டுலட்சம் பெறுமதியான சீன டொலர் நோட்டுகட்குச் சமமாகும். தேசீய அரசாங்கமும் பங்கமடைந்து நிலை குலைந்து படுமோசமாகி விடுகின்றது. ஒற்றுமைக் குறைவே இப்பரிதாப நிலைக்குக் காரணமாகும். பொதுவாகச் சீனமக்கள் முயற்சியும் விடாப்பிடியாக உழைக்கும் வன்மையும் பெற்றவர். எனினும் உயர்ந்த தேசீய உணர்ச்சி அவர்க்குக் கிடையாது. நாட்டின் சேமத்தை இலக்காகக் கொண்டு வாழுங் குணம் இல்லாதிருக்கின்றனர். சனத்தொகையிலும் விஸ்தீரணத்திலும் உலகில் மிகப் பெரியதாகும் இந்நாடு, உய்வடைய வேண்டில் இந்நாட்டு மக்கள் தமது வாழ்க்கையின் நோக்கினைத் திருத்தியமைக்கவேண்டும். சுயநலத்தை முற்றாக மறந்து தமது உடல் பொருள் ஆவியை நாட்டிற்கே அர்ப்பணஞ் செய்யவேண்டும். தமது பழைய கலாசாரத்தில பெருமைப்படவேண்டும். அந்நிய நாடுகளாகும் அமெரிக்கா, பிரிட்டன் முதலிய மேலைத் தேசங்கள் தமது நாட்டின் நிலைமையை நிதானிக்கவும் வருக்கவும் விடாது, தாமே தமது சமயம், கல்வி, நாகரிகம், பொருளாதாரநிலை என்பவற்றை ஏற்ற முறையில் விருத்தி செய்யவேண்டும். இந்த நிலை வந்தாற்றான் சீனம் மீண்டு உயர்ந்தநிலையை அடைவது சாத்தியமாகும்.

* * *

சீனம்பற்றி அமெரிக்கா கூட்டவிருக்கும் மகாநாடு சம்பந்தமாக இலங்கைக்கு இதுவரை எவ்வித செய்தியும் கிடைக்கவில்லை.




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆட்சேபமான வாசகம்

## மந்திரி—டொக்டர் தகராறு

### வானொலி செய்த வேலை

சமீபத்தில் மீன்பிடிப்பகுதி மந்திரி ஸ்ரீ பொன்னம்பலத்துக்குச் சாவகச்சேரியில் அளிக்கப்பட்ட வரவேற்பின்போது குறித்த மந்திரி மேற்சபை அங்கத்தவரான டொக்டர் ஈ. எம். வி. நாகநாதன் என்பவரைப்பற்றிப் பின்வருமாறு தமது பேச்சிற்குறிப்பிட்டிருந்தார். "நாட்டுப்புறத்துமருந்துச் சாலை ஒன்றின் இருள் மயத்தில் மங்கிமறைந்திருந்தவரை நான் வெட்ட வெளிச்சத்திற் கொண்டுவந்தேன். ஆனால் அடுத்த அகில இலங்கைத் தமிழ்க் காங்கிரஸ் மகாநாட்டின்போது அவர் மீண்டும் தமது பழைய இருள்நிறைந்த இருப்பிடத்துக்கே சென்றுவிடுவார்."

இவ்வாசகம் இலங்கையில் உள்ள பத்திரிகைகளில் வெளியாகியிருந்தது. சென்ற சனி, ஞாயிற்றுக் கிழமைகளிற் கொழும்புவானொலிநிலையம், வெளிநாட்டிலுள்ள இலங்கை மக்களுக்கென ஒலிபரப்பப்படும் செய்திகளுடன் குறித்த வாசகத்தையும் ஒலிபரப்பிற்று.

இதை டொக்டர் நாகநாதன் அவர்கள் ஆட்சேபித்திருப்பதுடன், தபால்—தந்திப் பகுதி மந்திரி சிற்றம்பலம் அவர்களுக்கும் தமது ஆட்சேபத்தைத் தெரிவித்துள்ளார்.

இலங்கை அரசியல் நிலைமையை நன்கு அறியாத வெளிநாட்டினர் குறித்த வாசகத்தைக் கேட்டுத் தம்மைப் பற்றிக் கேவலமாக நினைப்பார்கள் என டொக்டர் நாகநாதன் கருதுகின்றார். தமது கௌரவத்துக்கே பங்கமேற்பட்டிருப்பதாக நம்பும் டொக்டர் அவர்கள் அதற்குத் தகுந்த பரிகாரம் செய்யவேண்டுமென நிற்கின்றார். நடுநிலைமை வகிக்க வேண்டிய அரசினரின் வானொலி நிலையம் அப்படி நடந்து கொண்டதையும் டொக்டர் கண்டிக்கின்றார்.

மந்திரி சிற்றம்பலம் இது சம்பந்தமான விசாரணையை நடாத்துவார். குறித்த வாசகம் ஒலிபரப்பப் பட்டதையிட்டு மந்திரி தமது வருத்தத்தைத் தெரிவித்துக் கொண்டாராம். அத்துடன் வானொலியிற் பேசுவதற்கு டொக்டர் நாகநாதனுக்கும் ஒரு சந்தர்ப்பம் கொடுப்பதாக மந்திரி தெரிவித்துள்ளார் என அறியக் கிடக்கின்றது.

பிரதிநிதிகள் சபையிலும் இதுபற்றி மந்திரி பேசுவார்.

## மின்னேரியா

### வளம் நிறைந்த பூமி

இலங்கை அரசினரின் குடியேற்றத் திட்டங்களுள் மின்னேரியாவே வளம் நிறைந்ததாக இருக்கின்றது. வீதிகளுடன் இணைக்கப்பட்டுள்ள இக்கிராமம் ஒரு மாதிரித் திட்டமாகவே அமைந்துள்ளது.

இங்கு 50 ஏக்கர் நிலத்தில் மாமரங்கள் உள. ஏக்கர் ஒன்றுக்கு 70 ரூபா விகிதம் லாபங் கிடைத்துள்ளதாம். இப்போது 3821 ஏக்கர் நிலத்தில் நெல்லும், 2000 ஏக்கர் நிலத்தில் ஏனைய தானியவகைகளும் சாகுபடியாகின்றன. இன்று 621 குடும்பங்கள் குடியேறியுள்ளன.

மின்னேரியாத் திட்டம் நல்ல வெற்றி கண்டிருப்பதால் நீர்ப்பாய்ச்சுதற்கான வசதிகளும் பெருக்கப்படும்.

## யாழ்ப்பாணம் தீவுப்பகுதி ஐக்கிய சங்கம் திருகோணமலை

ஷை சங்கப் பொதுக்கூட்டம் 15-5-49 ஞாயிற்றுக்கிழமைகாலை பரி. யோசேப் பாடசாலை மண்டபத்தில் திரு யோ. பீற்றர்பிரான்சிஸ் அவர்களின் தலைமையில் ஆரம்பமாயிற்று. அத்தருணம் சங்கத்தின் நோக்கங்களைபற்றி பலர் சொற்பொழிவாற்றினார்கள்.

பின்வருவோர் உத்தியோகஸ்தர்களாகத் தெரிவு செய்யப்பட்டனர். **தலைவர்:** யோ. பீற்றர் பிரான்சிஸ். **உபதலைவர்கள்:** திருவாளர்கள் இ. துரைச்சாமி, வ. ம. பெஞ்சமின் வே. கந்தையா. **காரியதரிசி:** திரு க. வே. துரைசிங்கம். **உபகாரியதரிசி:** ஞ. மார்செலின். **தனாதிகாரி:** திரு நா. தருமலிங்கம். **உபதனாதிகாரி:** திரு இ. அன்ரேனி. **பரிசோதகர்கள்:** திருவாளர்கள் ம. தேவசகாயம், இ. இம்மானுவேல். 25 பேரைக் கொண்ட நிர்வாக சபையும் அமைக்கப் பெற்றது. —நிருபர்.


## யாழ்ப்பாணம் ஐக்கிய லாபநிதி

**1918-ம் ஆ. ஸ்தாபிதமானது.**

வங்கிக்காரர் மூலநிதி 8 லட்சம் ரூபா.

இதுவரையிற் கொடுக்கப்பட்ட பங்குப்பணம் ரூபா 34,36700. 100ரூபா விகிதமான 8000 பங்குகள்

**பங்குப்பணங் கட்டுமுறை:**
மாசமொன்றுக்கு 1 ரூபா விகிதமாக 75 மாசகாலத்திற்கு மாதந்தோறும் கட்டப்படவேண்டியது. குறித்த காலமுடிவில் பங்கொன்றுக்கு ரூபா 100 திருப்பிக் கொடுக்கப்படும். பங்குகள் எந்த நேரமும் வாங்கலாம்

**தினசரிப் பற்று வரவு:**
எச்சமிதி சராசரி 500 ரூபாவுக்குக் குறையாமல் இருக்குமானால் ஒரு விகித வட்டியுடன் தினசரிப் பற்றுவரவு செய்யலாம்.

**தவணை வரையறுக்கப்பட்ட க்ஷேமப்பணம்:**
க்ஷேமப்பணம் 3 மாசம், 6 மாசம், 9 மாசம், 12 மாசம் என்னுங் காலங்கள் வரையறுத்து ஏற்படும் வட்டியும் முறையே 1விகிதம், 2 விகிதம், 4 விகிதம், 6விகிதமாகக் கொடுக்கப்படும்.

**உண்டியல்கள்:**
கொழும்பிலுள்ள "நாஷனல்" வங்கியிலும் "இம்பீரியல்" வங்கியிலும் இந்தியாவிலுள்ள பிரதான பட்டினங்களிலும் மாற்றத் தக்க விதமாகக் கொடுக்கப்படும்.

இந்தியா நோட்டு வட்டத்திற்கு மாற்றிக் கொடுக்கப்படும்.

**கடன்:**
நகைகள் ஈடுவைத்துக்கொண்டு கடன் கொடுக்கப்படும். வட்டி 9 விகிதம் அறவிடப்படும். (ஈடுவைத்தவர்கள்) முதலையும் பாகம் பாகமாகக் கொடுக்கலாம்.

வேண்டிய விபரங்களை என்மூலம் அறிந்து கொள்ளலாம்.

S. கனகசபை
சிறுப்பர்

[3658]


## சமாதான நீதவான் ஸ்ரீ ச. பொன்னம்பலம்

### ஜோகூரில் தமிழர் சேவை

ஜோகூரைச்சேர்ந்த மூவார் இலங்கைச் சங்கத்துக் காரியதரிசி எழுதுவதாவது:

ஸ்ரீ எஸ். பொன்னம்பலம் ஜே. பி. அவர்கள் ஜோகூர் சமஸ்தானத்திலுள்ள இந்தியர், இலங்கையர்களின் கல்வி மேம்பாட்டிற்காகப் பெரிதும் உழைத்துவரும் ஒரு பெரியார்: 1935-ம் வருடம் ஜோகூரின் சரித்திரத்திலேயே முதல் தடவையாக சமாதான நீதிபதியாக நியமிக்கப்பட்டவர் இவர்தான் என்பது குறிப்பிடத்தக்கது. மூவார் இலங்கை சங்கத்திற்கு இவர் தலைவராகவும், ஜோகூர்சமஸ்தான சட்ட சபையில் ஒரு அங்கத்தினராகவும் இருந்து வருகின்றார். சமஸ்தானத்திலுள்ள சிறு சிறு ஊர்களிலும் ஆரம்ப ஆங்கிலப்பாடசாலைகள் திறக்கப்படவேண்டுமென்றும் 'கம்பங்களி'லுள்ள பிள்ளைகளும் ஆங்கிலப்பாடசாலைகளிற் சேர்ந்து படிப்பதற்கு வேண்டிய வசதிகள் செய்து கொடுக்கப்படவேண்டுமென்றும் ஜோகூர்சமஸ்தான சட்டசபையில் இவர் பெரிதும் வாதாடினார். ஹிந்துக்களின் விவாகப் பதிவுக்காக சமஸ்தான சட்டசபையில் ஒரு மசோதா சமர்ப்பித்தார்.

### இலங்கை வாழ்க்கை

ஸ்ரீ எஸ். பொன்னம்பலம் ஜே. பி. அவர்கள் யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த கட்டுடை என்னும் ஊரிற் பிறந்து, யாழ்ப்பாணம் விக்டோரியா கல்லூரியிற் கல்வி பயின்று 1903-ம் வருடம் கல்கத்தா சர்வகலாசாலைப்பரீட்சையிலும் தேறினார். தமது பழைய கல்லூரியிலேயே சிறிது காலம் ஆசிரியராயிருந்தபின் மானிப்பாய் ஹிந்துக்கல்லூரியில் சேர்ந்து, அங்கு 1914-ம் வருடம் வரையிலும் போதகாசிரியராகவும் இருந்தார். 1914 முதல் 1922 வரை மலாயாவில் மூவார் அரசாங்க ஆங்கிலப்பாடசாலையில் முதலாவது உதவி ஆசிரியராகப் பதவிவகித்து வந்த பின்னர் 1922-ல் போதகாசிரியர் பதவியினின்றும் விலகினார். 1935-ல் ஜோகூர் சமஸ்தானத்தில் முதன்முதலாக சமாதான நீதிபதிகள் (ஜே. பி.) நியமிக்கப்படும்போது, மேன்மை தங்கிய ஜோகூர் சுல்தானே ஸ்ரீ பொன்னம்பலம் அவர்களின் அரிய சேவைகளைப் பாராட்டி, அவரை ஒரு சமாதான நீதிபதியாக முதன் முதலில் நியமித்தார். அதிலிருந்து அவர் சமஸ்தானத்தில் பல பகுதிகளிலும் நிர்வாக சபைகளிலும் அங்கம்வகிக்கலானார்.

சமீபத்தில் இவர் வெளியிட்டுள்ள **திருத்தொண்டர் புராணச்சுருக்கம்** என்ற அரிய நூலானது மலாயா வாழ் தமிழ் மக்களுக்கு ஒரு சிறந்த பொக்கிஷமாகிவிட்டது.

### இந்து விவாகப் பதிவு மசோதா

ஸ்ரீ பொன்னம்பலம் அவர்கள் சென்ற வருடம் ஜோகூர் சமஸ்தான சட்ட சபையில் ஹிந்துக்கள் விவாகப் பதிவு மசோதாவைப் பிரேரித்துப் பேசுகையிற் பின்வருமாறு கூறினார்:—

'இந்துக்கள் விவாக சம்பந்தமாய் தற்போது எவ்விதச் சட்டமும் இங்கு இருந்து வரவில்லை. இவ்விதம் ஜோகூரெங்குமுள்ள இந்து சமூகத்தினர் விவாகங்களுக்குச் சட்டபூர்வமான ஒருவித ஆதாரமுமில்லாமலே விட்டு வைத்திருப்பது நேர்மையல்ல. பேரா, சிலாங்கூர், நெகிரி செம்பிலான், பாஹாங் முதலிய இதர சமஸ்தானங்களில் இந்துக்கள் விவாக சம்பந்தமாய்ச் சட்டங்கள் நடைமுறையிலிருந்து வருகின்றன. அதேபோன்று ஜோகூர்சமஸ்தானத்திற்குள்ளும் சட்டம் இயற்றுவது அத்தியாவசியமாகும்.

இந்திய இலங்கையருக்குள் ஜோகூர் சமஸ்தானத்தில் முதல் முதலாக [illegible] பதவியைப் பெற்றிருப்பவர் ஸ்ரீ. பொன்னம்பலம் சமாதான நீதிபதி அவர்களென்பது குறிப்பிடத்தக்கது.

## மாபெருங் கட்டடம்

### 440 மாடிகள்

சான்பிரான்சிஸ்கோ என்ற நகரத்தில் 440 மாடிகளைக் கொண்ட கட்டடத்தைக் கட்டுவதற்கான திட்டம் வகுக்கப்பட்டுள்ளது. இதற்கு 175 கோடி பவுண் செலவாகுமென மதிப்பிடப் பட்டுள்ளது. ஒரு நகரத்தை இங்கு அமைத்துவிடலாம். இதில் 1000 கடைகளும் 10 வைத்தியசாலைகளும் 20 மாதா கோயில்களும், நிறுவப்படும். மாடிகளில் ஏறி இறங்குவதற்கு 300 மின்சாரத் தூக்குக் கூடுகள் அமைக்கப்படும். இங்கு 80, 000 'கார்'கள் நிற்பதற்கான வசதிகள் செய்யப்படும்.

## தொண்டமனாறுசெல்வச்சந்நிதி சுப்பிரமணியப் பெருமானின் மகா சங்காபிஷேகம்

சென்ற (21-5-49) சனிக்கிழமை முற்பகல், 1008 அண்டங்களையும் அடக்கி ஆண்ட சூரபதுமனை சங்காரஞ்செய்த வெற்றி வேலாயுதப் பெருமானுக்கு மகா சங்காபிஷேகமும், அன்னாபிஷேகமும், சந்தனாபிஷேகமும் நடைபெற்றன. அன்று மாலை 6 மணியளவில் சங்காபிஷேகமகிமை என்னும் விஷயம்பற்றி சிறந்த பக்கவாத்தியங்களோடும் இன்னிசைப் பாடல்களோடும் ஓர் அரிய பெரிய உபந்நியாசம் நடைபெற்றது. அன்றிரவு வெற்றிவேலாயுதப்பெருமான் இருதேவிமாரோடு இந்திரவிமானத்தில் வீதி வலம்வந்தார். —நிருபர்.

## விமானி டன்கன்ஸன்

ஆகாய விமானங்கள் இயக்குவதிற் கொழும்பிலே பயிற்சி அளித்துவந்த விமானப் போதகாசிரியர் ஆர். டன்கன்ஸன் சென்ற சனிக்கிழமை (21-5-49) ஒரு விமானத்துடன் பறந்து சென்றார். பரீட்சை செய்து பார்ப்பதற்காகப் பறந்து சென்ற விமானி 15 நிமிடத்தால் திரும்பியிருக்கவேண்டும். ஆனால் அவர் அடுத்தநாளும் திரும்பவில்லை.

விமானங்களிற் பறந்து சென்று தேடிய விடத்தும் அவர் தென்படவில்லை. விமானத்தின் உடைந்த சில பகுதிகளை கடற்கரையிற் காணப்பட்டன. சென்ற 24-ந் தேதிதான் இவருடைய பிரேதம்மிகவும் பழுதடைந்த நிலைமையில் பாணந்துறைப்பகுதியையடுத்த கடலோரத்திற் காணப்பட்டது. தலை நொருங்கியிருந்தது. விமான விபத்தால் மரணம் ஏற்பட்டதென மரண விசாரணை நடத்திய நீதிபதி தீர்ப்பளித்தார்.

இறந்த விமானிக்கு மனைவியும் ஒரு மகனுமுளர்

## ஆதிகால மனிதன்

ஆதிகாலத்து மனிதன் சம்பந்தமாக இலங்கையில் இதுவரை செய்யப்பட்டிருக்கும் ஆராய்ச்சிகள், நிபுணர்களுக்கிடையே ஒரு கிளர்ச்சியை உண்டுபண்ணியிருக்கிறது. மனிதனின் பரிணாம நிலையைத் தெளிவாக விளக்கத்தக்க சாதனங்களை வைத்துக்கொண்டு இலங்கையின் ஆதிகாலத்து மனிதன் சம்பந்தமான ஆராய்ச்சியைத் தொடங்குமாறு ஹார்வார்டிலுள்ள உயிர்வர்க்கத்துறை நிபுணர்கள் இலங்கைத் தேசிய நூதனசாலை அதிகாரியைக் கேட்டுள்ளனர். இந்த ஆராய்ச்சி சுமார் ஆறு வருடகாலம் நடைபெறுமென்றும், அதற்கான செலவுக்கு இலங்கை அரசாங்கம் ஆரம்பத்தில் 2000 ரூபாய் ஒதுக்குமென்றும் தெரிவித்தது. இந்த ஆராய்ச்சிவேலை இப்பொழுது ஆரம்பமாகிவிட்டது.

## வல்லரசுகள் சந்திப்பு

(5-ம் பக்கத் தொடர்ச்சி)

சீனத்தின் வர்த்தகத் தலைநகரமாக விளங்கும் ஷங்காய், தூர கிழக்குப் பகுதிகளின் வியாபார ஸ்தலமாகவும் திகழ்கின்றது. இதன் ஜனத்தொகை 6,000,000க்கு அதிகமாகும். 345 சதுரமைல் பரப்பிலே தொழில் துறைகளில் ஈடுபட்டிருப்போர் வசித்து வருகின்றனர். இதுவே சீனத்தின் யந்திரத் தொழிற்சாலைகள் மிகுந்த நகரமாகவும் இருக்கின்றது.

1843-ம் ஆண்டிலே இங்கு அடிவைத்த பிரிட்டிஷார், அந்நகரத்திலேயே அதிக தொகையினராக உறைந்து வந்தனர். இப்போது அங்கு வசிக்கும் அந்நியரின் தொகை 30,000 என மதிப்பிடப்படுகின்றது.

இத்தகைய ஒரு வளம் நிறைந்த நகரத்தைப் பரிசாக ஈட்டியுள்ள சீனத்துக் கொம்யூனிஸ்டுகளின் மகிழ்ச்சிக்கோ எல்லையில்லை. எனவே, இவர்கள் இடையிடையே வான வெளியிலே துப்பாக்கி வேட்டுத் தீர்ந்துகொண்டு சென்றனர். வீட்டு வாயில்களில் நின்றவர்களைப் பச்சைநிறக் காக்கியுடை தரித்த இக்கொம்யூனிஸ்ட் படைகள் வெருட்டித் துரத்தவில்லை.

தேசியத் துருப்புகள் பல முனைகளிலிருந்தும் திட்டப்படி பின்வாங்கி விட்டனர். இவர்கள உற்சாகமாக நின்று கொம்யூனிஸ்டுகளை எதிர்த்துப் போர் புரிந்தாலுங்கூட ஷங்காய் நகரைப் பாதுகாக்கவே முடியாது.


## பூகோளத்தொடர்

# பூமிசாஸ்திரம்

### நான்காம், ஐந்தாம் புத்தகங்கள்

பலகாலம் ஆசிரியராயிருந்து அனுபவம்பெற்ற திரு. வே. மு. சபாரத்தினசிங்கம், B. A., அவர்களால் 4-ம், 5-ம் வகுப்புகளுக்கென, பாடத்திட்டத்துக்கமையச் சிறந்த முறையில் எழுதி வெளியிடப்பட்டிருக்கின்றன.

4-ம் புத்தகம் — சதம் 80
5-ம் புத்தகம் — ரூ. 1-00
தபாற் செலவு வேறு

★

சுன்னாகம்: தனலக்குமி புத்தகசாலை


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




**மருமக்களே!**

வணக்கம். "லோ. மாகிறத் (மே. 16) எழுதிய **தாவரம்** என்ற கட்டுரையை நான் வாசித்தேன். மிகவும் நன்றாயிருக்கிறது. அவர் எமக்காக இவ்வளவு சிரமப்பட்டு எழுதியதற்காக நான் அவருக்கு எனது நன்றி செலுத்தக் கடப்பாடுடையேன். அவருடைய அறிவை நான்மெச்சுகிறேன்" என்று மருமகன் இ. பேரின்பநாயகம் (மே.222) எழுதியிருக்கிறார். மீண்டும் இ. பேரின்பநாயகம், "**நாம் செய்ய வேண்டியன** என்பனவும் பற்றி சி. செல்வானந்தன் (மே. 197) எழுதியிருந்தார். அவருடைய பாட்டு சுலபமாக விளங்கக்கூடிய நடையில் எழுதப்பட்டிருக்கின்றது. அவருடையபாட்டையும் நான் மெச்சுகிறேன்" என எழுதியிருக்கிறார்.

மருமகன், ஆ. கணபதிப்பிள்ளை (மே. 12) கீழ்ப்பிரிவு மருமக்களுக்குகந்த ஒரு கட்டுரை வெகு சுவாரஸ்யமாக எழுதியிருக்கிறார். அவரது தொடர்கதை முடிவுற்றதும், இக்கட்டுரை பிரசுரமாகும்.

மருமக்களே, இவ்வளவு ஊக்கமாகக் கடமையாற்ற நீங்கள் முன்வந்ததற்காக என்பேரினாலும், என் மருமக்கள் பேரினாலும் அவர்களுக்கு ஸ்துதி கூறுவதினால் ஏதாவது குறையுண்டா? வணக்கம்.

கேசரிமாமா

## மாமா பதில்

**வேத. தணிகாசலம்.** மே.9: உமது ஆலோசனைகள் மிகவும் நன்றாயிருக்கின்றன. இந்த வருஷத்திலேயே விவாத மேடை ஒன்றை அமைக்க முயற்சி செய்வேன். உமது புகைப்படத்தை அனுப்பிவையும். உம்மை நேரிற்காணும்பாக்கியம் கிட்டாவிட்டாலும். படத்தில் ஆவது பார்த்து மகிழ்ச்சி கொள்ளலாமல்லவா? பத்திரிகாலயத்திற்கு வருவதுபற்றி உமக்குத்தனிக் கடிதம் போட்டிருக்கிறேன்.

**ந. சிவபாதம்.** மே.267. உமது கட்டுரை கிடைத்தது.

**பூ. சதாசிவரத்தினம்** மே.256: பிரசுரிப்பதற்குத் தகுந்த கட்டுரையாகக் காணவில்லையே! வெண்பாக்கள் கிடைத்தன.

**இ. பேரின்பநாயகம்.** மே.222: சந்தாதாரனுகச் சேருவதற்கு முற்பணம் கட்டினால் உசிதம். வருஷத்திற்கு ஆறு ரூபாவாகும். உம்முடைய குறிப்புகளை எனது கடிதத்திற்பாரும். மாத சஞ்சிகை பிரசுரிப்பது தற்பொழுது இயலாத காரியம். தொ. செபமாலையின் கட்டுரை கிடைத்தது வேத. தணிகாசலம் மிகவும் நல்லவர். அவரொடு கூடிப்பழகுதல் மெச்சத்தக்கதே. நீங்கள் இருவரும் நண்பர்களாயிருப்பது எனக்கே ஒரு பெருமையல்லவா?

**வி. சுப்பிரமணியம்.** மே.80: நான் கண்ட கனவு கிடைத்தது.

**சி. வரப்பிரகாசம்.** மே.270: உமது கட்டுரைகள் கிடைத்தன.

**ஆ. கணபதிப்பிள்ளை.** மே.12: நீர் வந்துபோனதாக பத்திரிகாலயத்தில் எனக்குச் சொன்னார்கள். காஞ்சோண்டி வயிரவ கோயிலிலிருக்கும் சாமியாரை 'சாணு' பார்த்து வந்து எனக்குக்கூறினார். மிகவும் விந்தையாகத்தானிருக்கிறது. சகல சம்பத்துகளிலும் பெண்கள் விருப்பமுடையவர்களாதலால் தான். ஆண்மக்களுக்கு எதுவும் சரிதான்.

**மூ. இராசலிங்கம்,** மே.272; **மு. மாணிக்கம்,** மே.273; **மா. அர்ச்சுனராசா,** [illegible] உங்கள் மூவரையும் [illegible] மருமக்கள் ஆக்கியிருக்கிறேன்.

## நீடித்த ஆயுளுக்கு ஏற்ற விதிகள்

நாள் ஒன்றிற்குக் குறைந்தது 8 மணிநேரம் தூங்க வேண்டும்.

2. படுக்கை அறையிற் காற்று நன்றாக வீசும்படி யன்னல்களை யெல்லாம் திறந்து வைத்துக் கொள்ளல் வேண்டும்.

3. உடம்பின்சூட்டிற்குச் சரியான சூடுள்ள வெந்நீரில் தினமும் காலையிலே முழுகினதும் உடம்பு நன்றாகக் காயுமட்டும் உலர்ந்த துணியைக் கொண்டு துடைத்தல் வேண்டும்.

4. மாமிச உணவைக் குறைத்துக் கொண்டு சத்துப் பொருள் அதிகமாக உடைய தாவரப் பதார்த்தங்களையும் பருப்பு வகைகளையும் சாப்பிடல் வேண்டும்.

5. மலம் அன்றாடன் றகழிய வேண்டும்.

6. பல்லிலும் வயிற்றிலும் உள்ள அசுத்தங்களை நாள்தோறும் போக்கிப் பல்லைச் சுத்தமாக வைத்திருத்தல் வேண்டும்.

7. அளவிற்குமிஞ்சிய வேலை செய்யக்கூடாது.

8. கோபத்தையும் கவலையையும் போக்கிச் சாந்தமாக இருத்தல் வேண்டும்.

**சி. வரப்பிரகாசம்–மே.270**

## மருமக்கள்

மே. 272. முருகு. இராசலிங்கம், யூனியன்கல்லூரி, தெல்லிப்பளை; மே. 273. முத்தையா மாணிக்கம், நடேஸ்வரக்கல்லூரி, காங்கேசந்துறை; மே. 274: மார்க்கண்டு அர்ச்சுணராசா, ஆஸ்பத்திரி ஒழுங்கை, வல்வெட்டித்துறை.

# நிலா

**இ. பேரின்பநாயகம், மே.222**

(1) எந்தன் நிலாவே! இன்பத்தி ஞெளியே!
இன்பமுடன் வாராய் என்னருகு தனிலே
இந்தவுல கினிலே உனக்குநிகர் யாரோ?
இனிதேவக் தமர்வாய் மதியெனுங்கண் மணியே.

(2) தாமரை மலர்கள் விரிந்திட வருளாய்
தாரகை யாளும் தாரகா பதியே!
தாமரை மலர்களும் முல்லை மலர்களும்,
சோதி விளங்கிட விரிந்திடச் செய்வாய்!

(3) மல்லிகை மலர்கள் மலைகளில் மலரின்,
மகிழ்ந்தெமக் கருளும் மதியெனும் ஜோதியே
வல்லிகை யணியும் மாதருனைக் கண்டு,
மயங்கியே போகத் தவமெது செய்தாய்?

(4) பாலர்கள் போற்றப் பூபதி போற்றப்
படைத்தா னரனே உன்கருணை கொண்டு
சீலம் மிகுந்த செந்தமிழ்ப் பாவலர்
செதிவுடன் போற்றும் சிறந்தபொன் அமுதே.

(5) உலகோர் புகழ இரவினில் வந்து
ஒளிர்தல் காண ஒளிர்வுசெய் வாயே,
நிலவும் இருளும் நினைத்துநிற் பதனால்
சிறந்து போற்றச் சிறிதும் தயங்கோமே!

# குற்றம் யாருடையது?

**ஆ. கணபதிப்பிள்ளை மே.12**

(சென்றவாரத் தொடர்ச்சி)

"ஏனிப்படிக்கதவைஉடைப்பான்" என்று மீனாட்சி கூறிக்கொண்டு வந்தாள்.

"என்ன! உன் அப்பன் வீட்டுச் சொத்தா? நீ என்ன கேட்கிறது. கமலா இங்கே வா!"

"என்ன அப்பா! இதோ வந்து விடுகின்றேன்!"

"அப்பாவா! கூப்பிட்டால் வா!"

"என்ன! நாளை தொடக்கம் நீ பள்ளிக்கூடம் போகப்படாது."

"ஏன்?"

"ஏனு? என் விருப்பம்."

"மீனாட்சி, இங்கே வா. புதன்கிழமை பெண்பார்க்க அம்பலவாணரும் அவர் மனைவியும் வருவார்கள். அதற்கான ஆயத்தங்கள் செய்! போ! எனக்கொன்றும் வேண்டாம். வெளித்திண்ணையிற் பாயைப் போடு."

"அப்பா! நாளைக்குக் கட்டாயம் பள்ளிக்கூடம் போக வேண்டும்."

"என்னடி! நளவன் வீட்டுக்குப் போகத்தான் வேண்டுமா? கட்டாயம். சரி இப்பவே புறப்படு."

"புறப்படட்டுமா?

"கமலா, ஏனடி இப்படி அப்பாவுடன் பேசுகின்றாய். மூந்திவந்த செவியல்லவா? அதை எப்படி பிந்தி வந்த கொம்பு மறைக்கும்!

"அம்மா கொம்பு பிந்தி வந்தாலும் வைரமானது. அதை யசைக்க முடியாது."

"என்னடி கதைக்கின்றாய் நளப்பெண்ணே, போவெளியே" என்று கூறித் துரத்தி விட்டு ஐயர் உள்ளே வந்தார்

பெற்றமனம் பித்தல்லவா! மீனாட்சி ஓடிவந்து கமலா! இங்கேவா! என்று கதறுகின்றாள். கமலாவோ ஆவேசம் வந்தவள்போல நடக்கலானாள். ஐயருக்கு என்ன செய்வ[illegible] 'மடார்' என்று மீனாட்சியை அடித்துவிட்டுக் கதவைப் பூட்டிக்கொண்டு படுக்கச்செல்கின்றார். மீனாட்சி அறிவில்லாமல் முற்றத்திற் கிடக்கிறாள். இரவு 9.30. மணியாகிவிட்டபடியால் கிராமத்தில் நிசப்தம் ஆரம்பிக்கிறது' கமலாவும் நடந்து கொண்டேயிருக்கிறாள், எங்கே போவது, எங்கே போகின்றேன் என்பது தெரியாது நடந்துகொண்டே இருக்கின்றாள். பொழுதுபட்டதும் வீட்டால் வெளிவராத கமலா, இப்போது 'விர் விர்' என்று நடக்கின்றாள். உணர்வில்லாது நடந்து சென்றவள், "யாரது" என்ற குரலைக் கேட்டதும் திரும்பினாள்.

"யாரது! கமலாவா! இந்த இருட்டில்."

'கந்தசாமியா! என்னை யாழ்ப்பாணம் துரத்துகின்றது யான் செல்கின்றேன."

"எங்கே!"

"தெரியாது."

"நான் செல்லுமிடத்திற்கு வருவாயா!"

"ஆம். தாராளமாக! எங்கே!

"வீட்டிற்குத்தான்."

"சரி வா!" கமலா, கந்தனுடன் செல்கின்றாள். கந்தன் வீட்டையடைந்ததும் தாய் குடல் நடுக்கத்துடன். கந்தா என்னடாவேலை இது. என்னை இருக்கவிடடா. உயிருடன்.....

"நாச்சியார். ஏனுக்கும் இந்த இரவில்!

"பொன்னம்மா என்னை நாச்சியார் என்று கூப்பிடவேண்டாம். என்பெயர் கமலா"

"ஐயோ கந்தா நான் இருப்பது உனக்கு விருப்பமில்லையா! ஆச்சி பயப்பிடாதே! நான் கமலாவை பாரந்தனில் என் பெரியாச்சி வீட்டிலே விட்டு விடுகிறேன். அந்த பத்து ரூபாவையும்தா! றெயிலுக்கு இன்னும் 45 நிமிஷம்தான் இருக்கு."

"என்னடா நடந்தது."

"எல்லாம் நாளைக்குச் சொல்கிறேன்."

"நாச்சியாருக்கு ஒரு இளநீர் பிடுங்கிக் கொடடா."

"பொன்னம்மா! ஒன்றும் வேண்டாம் கொஞ்சம் தண்ணீர் தா!"

கந்தசாமியும் கமலாவும், செல்கின்றனர்; பொன்னம்மா வாசலில் இருக்கின்றாள்.

ஐயர் எழுந்து கடிகாரத்தைப் பார்க்கின்றார்.

நேரம் ஒரு மணி. விறுவிறென்று தீட்சகர் வீட்டிற்குச் சென்று தீட்சகரை எழுப்பி, கமலாவைக் காணவில்லை என்று கூறுகின்றார். என்ன, காரியம் இன்னும் முற்றவில்லை. ஒரு 50 ரூபா கொடுத்து மூன்று பொலிஸ்காரரை விடும் நளக் கந்தன் வீட்டிற்கு என்று யோசனை கூறி இருவரும் பொலிஸ் நிலையத்திற்குச் சென்றனர். நிலையத்தை அடைந்ததும் விபரத்தை 'இன்ஸ்பெக்ர'ருக்கு அறிவிக்க அவர் மூன்று பொலிஸ்காரரை இவர்களுடன் அங்கு நின்ற காரில் அனுப்புகின்றா. 'கார' கந்தன் வீட்டை அடைந்ததும் பொலிஸ்காரர் உட்சென்று கந்தன் எங்கேஎன்று கேட்க, பொன்னம்மா உள்ளதைக் கூறினாள். பொலிஸ்காரர் "நளப் பெண்ணே உங்களுக்கு அவ்வளவு துணிவா" எனக் கூறித் தங்கள் மிருகத்தனத்தை பொன்னம்மாவிடம் காட்டுகின்றனர். என் செய்வாள் பொன்னம்மா! நம் யாழ்ப்பாணத்தில் விலங்குகளுக்கு இருக்கும் சுதந்திரம் கூட ஹறிஜனர்க் கிலையே! தீட்சதர் பரந்தன் சென்றால் கந்தனைப் பிடித்துவிடலாமென்று யோசனை கூறுகின்றார். தீட்சதர் யோசனையுடன் 'கார்' பரந்தனை நோக்குகின்றது.

—தொடரும்.

## பிறந்ததின வாழ்த்துக்கள்

22-5-49 — 4-6-49

●

மே. 12. ஆ. கணபதிப்பிள்ளை; மே. 138 சி. சேனாதிராசா; மே. 15[illegible] இ. சிவலிங்கம்; மே. 160. பொ. விஷ்ணு; மே. 39. ஏ. ஸி. எம். மஸூத்; கீ. 51. தா. பொன்னம்பலம்; மே. 105. கு. நவமணி; மே. 196 தி. பாலேந்திரன்; மே. 238. ஏ. சுப்பையா

●

மேற்குறித்த எனது மருமக்கள் இன்று போல் இன்னும் பல்லாண்டு வாழ்க.

**குறிப்பு**

இடமின்மையாற் சென்ற வாரம் பிறந்ததின வாழ்த்துக்கள் கூற முடியாமற் போய்விட்டது —கே. மா.

## ஈழகேசரி — பாலர் பகுதி

முழுப்பெயர்:........................................

விலாசம்:........................................

........................................


........................................

பிறந்ததிகதி:........................................

........................................

தந்தையார் அல்லது ஆசிரியர் ஒப்பம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




# கொழும்பு வானொலி

## தமிழ் நிகழ்ச்சிகள்

கொழும்பு வானொலித் தமிழ் நிகழ்ச்சிகளைப் பற்றிப் பலரும் பலவிதமாகப் பேசிக்கொள்ளும் இந் நாட்களில் அவைபற்றிய சில விபரங்களை அறிவது நன்று.

எங்கள் வானொலி நிலையத்து நிகழ்ச்சிகளைச் சீர்திருத்தி, முன்னேற்ற மடைந்த மற்றைய நாடுகளின் வானொலி நிலையங்களின் அந்தஸ்தை ஒத்ததாக நமது நிலையத்தையும் அமைக்கும் முயற்சி 1941-ல் செய்யப்பட்டது, அவ்வாண்டில், வானொலி நிலயத்தில் எவ்வித சீர்திருத்தங்கள் செய்யவேண்டும் என்பதை ஆராய்ந்து, யோசனைகள் கூறுவதன் பொருட்டு திரு. கே. வைத்தியநாதன் அவர்கள் நியமிக்கப்பட்டார். அவர் சகல விஷயங்களையும் ஆராய்ந்து பல யோசனைகளைக் கூறி நீண்டதோர் அறிக்கையைச் சமர்ப்பித்தார்.

### ஆலோசனைச்சபை

அவர் கூறிய யோசனைகளில், வானொலி நிகழ்ச்சிகளில் ஆலோசனை கூறுவதற்கென ஓர் ஆலோசனைச்சபை, சிங்களத்துக்கும் தமிழுக்கும் ஏற்படுத்த வேண்டுமென்பதும் ஒன்ருகும். ஆனால் திரு. வைத்தியநாதன இவ்வித ஆலோசனைச் சபைகட்கு எவ்வித அதிகாரமும் இருக்கக் கூடாதென்றும், வெறுமனே அதன் பெயருக் கேற்றவாறு ஆலோசனை மாத்திரமே கூறலாமென்றும் விளக்கியிருந்தார். ஆலோசனைச் சபையின் கடமை பெயருக் கேற்றாற் போல ஆலோசனைகளைக் கூறுவதுடன் சரி; அந்த யோசனைகளை நிலய அதிகாரிகள் உசிதம்போல அங்கீகரிக்கலாம் அல்லது விரும்பினுல் நிராகரித்தும் விடலாம்.

### நடப்பதென்ன?

ஆனுல் தமிழுக்கென நியமிக்கப்பட்ட ஆலோசனைச் சபையினர் ஆலோசனை கூறுவதுடன் நின்றுவிடவில்லை. அவர்கள் கூறும் ஆலோசனைகளை அப்படியே ஏற்றுக்கொள்ளும் நிலைமைக்கு அதிகாரிகள் ஆளானுர்கள்.

ஆலோசனைச் சபையினரின் ஆலோசனைகளை நிராகரித்தால் தங்கள் உத்தியோகமே நிராகரிக்கப்பட்டு விடலாமென்ற அச்சத்தினுற் போலும் ஆலோசனைச்சபையின் கனவான்களின் ஆணையை அணுவளவும் பிசகாமல் ஏற்றுக்கொள்ள வேண்டியவர்களானுர்கள்.

இதனுல் ஆலோசனைச்சபையில் அங்கம் வகிக்கும் சீமாட்டிகளுக்கும், அவர்களுக்கு வேண்டியவர்கட்கும் நிகழ்ச்சி முறையில் அதிக்க மேற்பட வசதி உண்டாயிற்று. இந்தப் பரஸ்பர உதவியெல்லாம் தகுதி நோக்கியோ, தாரதரம் நோக்கியோ செய்யப்பட்டதென்று எவரும் சந்தேகிக்க வேண்டியதில்லை. உதவிகளெல்லாம் தீர்க்காலோசனையுடன், பிரதியுபகாரத்தை எதிர்பார்த்துச் செய்யப்பட்டன என்ற

இரசிகன்
கொழும்பு

வதந்தியில் உண்மை இருப்பதாகவே தோன்றுகின்றது.

### மூத்தண்ணு

கொழும்பு வானொலி நிலையம் திருச்சி, சென்னை என்ற அகில இந்திய வானொலி நிலையங்களிலும் பார்க்க மிகவும் வயதாற் கூடியது. எங்கள் நிலையம் 1923-ல் ஸ்தாபிதமாயிற்று. இதற்குப் பல வருடங்களின் பின் அதாவது 1938-ல் சென்னை நிலையம் ஆரம்பமாயிற்று. 1941ல் திருச்சி நிலையம் ஆரம்பமாயிற்று.

எங்கள் நிலயத்துக்குப் பல வருடங்கட்குப் பிறகு ஆரம்பிக்கப்பட்ட சென்னை, திருச்சி நிலயங்களையே இன்றும் இலங்கை வானொலிப் பிரியர்கள் மிக ஆவலுடன் கேட்கின்றனர். எங்கள் நிலயத்துக்குச் செவிசாய்ப்போர் மிகக் குறைவு. காரணம் என்ன! சென்னை, திருச்சி நிலயங்கள் பின்னுல் ஆரம்பிக்கப்பட்டன வானுலும், முன்னேற்றத்தில் மிகவும் முன்னுல் போய்க்கொண் டிருக்கின்றன. தென்னிந்தியாவில் கர்னாடக சங்கீத வித்துவான்கள் மிக அதிகம். நமது இலங்கையில் வித்துவான்கள் மிகக் குறைவு. இருப்பவர்கள் ஒரு சிலர் தாரா தரத்திலே மிகமிகப் படுமோசமானவர்கள் என்பது ஓரளவுக்கு ஒப்புக்கொள்ளப்பட வேண்டிய உண்மைதான். ஆனுல் 1923-ல் ஆரம்பித்த எங்கள் நிலயம், தனது அந்தஸ்தை ஓரளவுக்காவது சீர்திருத்தி, அதன்மூலம் சங்கீத வித்துவான்களும் தங்கள் வித்துவத் திறமையில் முன்னேற ஊக்கமளித்திருக்கலா மல்லவா?

### கண்டனங்கள்

எங்கள் நிலயத்தைப்பற்றி இலங்கையிற் கண்டனம் செய்யும் பத்திரிகைகட்குக் குறைவில்லை. கடந்த சில வருடங்களாகவே இக் கண்டனங்கள் கடித ரூபததிலும், கட்டுரை ரூபத்திலும், ஆசிரிய வசனங்களாகவும் வெளியாகியுள்ளன. இலங்கையில் வெளியாகும் பத்திரிகைகள் எல்லாமே எங்கள் வானொலி நிலயத்தின் ஏதாவது ஒரு அம்சத்தைப் பற்றியாவது கண்டனஞ் செய்துள்ளன என்பது [illegible] யாகும். இது, எங்கள் வானொலி நிலயத்தைச் சீர்திருத்துவதில் நமது பத்திரிகைள் கங்கணம் கட்டி நிற்கின்றன என்பதற்குச் சிறந்ததோர் அத்தாட்சியாகும். கண்டனங்களைக் குறித்து நாம் கவலைப்பட வேண்டியதில்லை. ஆர் ருத்தியும் அரிசியானுற் போதும்.

இனி, எங்கள் வானொலி நிலயத்துத் தமிழ் நிகழ்ச்சிகளைப்பற்றி ஆராய்வோம்.

### பேச்சுக்கள்

எங்கள் நிலயத்திலே மிக மோசமடைந்திருக்கும் பகுதி பேச்சுக்சுள்தாம். ஆலோசனைச் சபையார் இதைப்பற்றி என்ன ஆலோசனைகள் கூறுகிருர்களோ தெரியவில்லை. இலங்கையில்— யாழ்ப்பாணத்திலே எவ்வளவோ சிறந்த படிப்பாளிகள், மேதாவிகள் இருக்கிருர்கள். ஆனுல் இவர்களைப்பற்றி ஆலோசனைச்சபையார் அத்தனை பேருக்கும் ஒன்றுமே தெரியாதென அஞ்சவேண்டியிருக்கின்றது. வித்துவான்களும், புலவர்களும் இலக்கிய நிபுணர்களும் பத்திரிகை ஆசிரியர்களும் நிகழ்ச்சிகள் தயார் செய்யக்கூடியவர்களும் யாழ்ப்பாணத்திலும் இருக்கின்றுர்கள் என்பதை வானொலி ஆலோசனைச் சபையார் கேள்விப்பட்டதில்லை என்றே எண்ண வேண்டியிருக்கிறது.

### பேசுவோர் யார்?

விஷயமறிந்த அறிஞர்கள் பலரைப் புறக்கணித்துவிட்டு, எங்கள் வானொலி நிலயம் யாருக்குத் தஞ்சமளித்துளது? வானொலியில் நடக்கும் பேச்சுக்களைப் பொறுமையுடன் கேட்கக்கூடிய (துர்) அதிஷ்டமுள்ளவர்கள் இந்த வினுவின் விடையை உணர்ந்துகொள்வார்கள். எங்கள் வானொலி நிலயமானது. வரவர மாமியார் கழுதைபோலானுர் என்ற கதைக்கு இலக்காகி வருகின்றது. 'புளொக்' துடைப்பவர்கள், 'புறுாவ்' திருத்துவோர் முதலான பெரியார் வானொலியிலே பேசுவதற்கென்று ஏதாவ தொன்றை எழுதி நிலயத்துக் கனுப்பி விடுவார்கள். நிலயத்திலே ஆலோசனைச் சபையாரோ அல்லது வேறு ஒருவரோ இக்கட்டுரைகளைக் கண்ணோட்டம் செய்துவிட்டு 'இத்தனையாந் தேதி வந்து வாசித்துவிடவும்' என்று கட்டுரையை அனுப்பிய கனவான்களுக்கு உத்தரவு பிறப்பித்துவிடுகிருர்கள். பலன் மிக மோசமான, சகிக்கக்கூடாத, விவேகத்துக் கொவ்வாத, அர்த்தமற்ற வெறும் வார்த்தைக் குவியல்களை வானொலி இரசிகர்கள் கேட்கும் நிர்ப்பந்தத்திற் காளாகிருர்கள். ஆகவே, இரசிகர்கள் வேண்டாவெறுப்புடன் ஆங்கில 'ஜான்ஸ்' சங்கீதத்தையோ 'ஹிந்துஸ்தானி சங்கீதத்தையோ, கேட்க விரும்புவதில் விநோதமென்ன?

### 'ஓடிஷன்' பரீட்சை

சங்கீதம் பாடுவோருக்கு 'ஓடிஷன்' பரீட்சைவைத்துப் பரீட்சிப்பதுபோல, பேச்சாளர்கட்கும் பரீட்சை வைத்தால் என்ன? ஆனுல், எங்கள் வானொலி நிலயத்து 'ஓடிஷன்' சீர்கேட்டைப் பற்றிப் பேசவேண்டியதேயில்லை.

இதற்குமுன், புதிய தமிழ் நிகழ்ச்சிகள் உதவியாளரை, ஆலோசனைச் சபையார்தெரிவு செய்வதற்குமுன் — பேச்சுக்கள் எழுதிய [illegible] தைக் கவனிப்போம். எழுதி அனுப்பிய பேச்சை, நிலயத்திலே தமிழ் அறிவிப்பாளர்களாகக் கடமையாற்றுவோர் பரிசீலனை செய்து தெரிவு செய்தனர். ஒரு தடவை அவ்விதம் செய்த பின், அவர்களாகவே இத்தனையாம் தேதி இன்ன விஷயத்தைப்பற்றிப் பேச விருப்பமா? என எழுதிக் கேட்பார்கள். சம்மதித்தால், குறித்த தேதியிற் கட்டுரையை வாசித்துவிட்டு வரலாம். ஒருபானை சோற்றுக்கு ஓரரிசி பதமென்பது உண்மையே. ஆனுல், அப்பதம் பார்க்கும் வேலையை ஒலிபரப்புவதற்கு முன்பே செய்யவேண்டும்.

இப்படிப் பேச்சுக்களை எழுதி அனுப்பி, ஒரு சிலரின் அங்கீகாரத்தைப் பெற வேண்டிய நிலைமையில், அவர்களிலும் மேலான படிப்பு, விவேகம், மேதை என்பன வாய்ந்தவர்கள் இருக்கிருர்கள். இதனுலேதான் வானொலிப் பேச்சுக்கள் சீர்கேடடைந்து கற்றுக்குட்டிகளும், 'புளொக்' துடைப்பவர்களும், 'புறூவ் றீடர்'மாரும் ஏமாற்றிவிட்டுப் போகும் நிலைமையை அடைந்துவிட்டன.

எங்கள் நிலயத்தின் வேறு சில சம்பவங்களைப்பற்றிச் சந்தர்ப்பம் ஏற்படும்போது ஆராய்வாம். இப்போது இது போதும்.

---

## இலங்கா ஆயுர்வேதக் கல்லூரியின் 1949ம்ஆண்டுப் பரீக்ஷையின் முடிவு

1949ம் ஆண்டு மார்ச்மாதம் நடத்தேறிய வருடாந்தப் பரீக்ஷையிற் கீழ்க் காணும் மாணவர்கள் தாரதர ஒழுங்கின்படி சித்தியடைந்துள்ளாரென வட இலங்கைச் சுதேச வைத்திய சபையார் வெளியிட்டிருக்கிருர்கள்.

**விசேஷ வகுப்பு (L.A.M.P)**

பி. நாகராஜசர்மா I-ம் பிரிவு

**4-ம் வருடம் (D.A.M)**

எஸ். இராஜையா II-ம் பிரிவு

**3-ம் வருடம்**

1. கே. பாராஜசிங்கம் II-ம் பிரிவு
2. பி. பிலிப்ஸ் ,,
3. எ. நல்லையா III-ம் பிரிவு
4. வி. கதிரவேலு ,,
5. வி. செல்லையா ,,
6. எஸ். இராஜையா ,,

**2-ம் வருடம்**

1. என். இரத்தினசபாபதி II-ம் பிரிவு
2. ஜி. ஜோர்ஜ் III-ம் பிரிவு
3. எஸ். வேலும்மயிலும் ,,
4. வி. செல்லையா ,,
5. வி. சிவப்பிரகாசம் ,,
6. வி. கதிரவேலு ,,
7. எஸ். குணரத்தினம் ,,

**1-ம் வருடம்**

1. வி. சின்னப்பு III-ம் பிரிவு
2. கே. பொன்னம்பலம் ,,
3. கே. கணபதிப்பிள்ளை ,,
4. ரீ. தம்பியையா ,,
5. எஸ். குணரத்தினம் ,,
6. எஸ். கந்தசாமி ,,

---

## கோட்டு விற்பனவு விளம்பரம்

**இல. 4335**

கோப்பாய் வடக்கு,
**வல்லிபுரம் சதாசிவம்**, வழக்காளி
நல்லூர்,
**1. எஸ். பொன்னம்பலம் செல்லத்துரை**
**2. பெண் மீனும்பா**, எதிராளிகள்

யாழ்ப்பாணம் டிஸ்திறிக் கோட்டில் 4335-ம் இலக்க வழக்கில் எனக்குக் கிடைத்த கோட்டுக்கட்டளைப்படி, பின்னுல் விபரிக்கப்படும் மூன்று துண்டுக்காணிகளை, 1949-ம் ஆண்டு (ஜூன்) ஆனி மாதம் 24-ந் திகதி (24-6-49) வெள்ளிக்கிழமை பிற்பகல் $3\frac{1}{2}$ மணி தொடக்கம் அந்தந்தக் காணிகளுககுள் நின்று பிரசித்த ஏலத்தில் விற்கப்படும்.

**தீர்வைத் தொகை:**—முதல் வட்டி ரூபாய் 1945-00ம், இதில் ரூபாய் 1700-00 க்கு 18-3-48 திகதி தொடக்கம 14-6-48 திகதி வரைக்கும் 100-க்கு 8 வீத வட்டியும், பின் திகதி தொடக்கம் முழுத்தொகைக்கும் இறுபடும் வரைக்கும் 100-க்கு 5 வீத வட்டியும், கோட்டுச் செலவு ரூபாய் 140-95 சதம்.

**காணிகளின் விபரம்**

1. வடமாகாணம் யாழ்ப்பாணம் டிஸதிறிக் யாழ்ப்பாணப்பகுதி நல்லூர்க் கோவிற்பற்று நல்லூரிறை "தனைப்புலியாராயச்சிவளவு" நிலப்பரப்பு ஒன்று (1-ப்) குளி 6-ம் கல்வீடும் தலைவாசலும் இன்னும் இக்காணிக்குள் அமையும் மறு கட்டிடங்களிற் பாகமும், கிணறும் பயிர்களும். எல்லை: கிழக்கு, அருணுசலம் வேலுப்பிள்ளைக்கும் சகோதரர்களுக்குமுரிய ஆதனம். வடக்கு, ரோட்டு. மேற்கு, சுப்பிரமணியம் கந்தையாவின் ஆதனம். தெற்கு, கார்த்திகேசு கந்தப்பிள்ளையின் உருமைக்காரருக்குரிய ஆதனம். இதில் குறித்த கிணற்றில் கிழக்கெல்லைக் காணிக்குரிய பங்கும் வழி பாவிப்புரித்தும் இன்னும் மேற்கெல்லைக் காணிக்குக் குறித்த கிணற்றில் பங்கும். இக்காணியின் வடக்கெல்லையருகாக போக்குவரவு செய்யும் உரித்தும் ஆடுகால் துலைமுகங்களில் பாவிப்புரித்தும் புறநீங்கலாக மிகுதியடங்கலும் முற்பதிவு D. $\frac{130}{223}$.

2. மேற்படி நல்லூரிறை "திருபதன் காட்சிவளவும்" மறு பிரிவுகளும் நிலப்பரப்பு ஐக்தேகால் ($5\frac{1}{4}$ ம்) செய்பயிர் வான்பயிர்களும் பனைகள் வடலிகளும் மேற்கெல்லைக் காணிக்குள் இருக்கும் கிணற்றிற் பங்கும். எல்லை: கிழக்கு நல்லூர்க்கந்தசுவாமி கோவிலுக்குரிய ஆதனம், வடக்கு, வேலுப்பிள்ளை கைம்பெண் நாகமுத்துவின் ஆதனம், மேற்கு, பொன்னு கைம்பெண் வள்ளிப்பிள்ளைக்கும் பங்காளருக்குமுரிய ஆதனம், தெற்கு, வேலன் வல்லியின் ஆதனம். இதடங்கலும், முற்பதிவு D. $\frac{1568}{154}$.

3. மேற்படி நல்லூரிறை "கனக்கன் வளவும் படையவளவும்', நிலப்பரப்பு ஆறேகால் ($6\frac{1}{4}$-ம்) செய்பயிர் வான்பயிர்களும் பனைகள் வடலிகளும். உறுதிப்படி எல்லை: கிழக்கு, நல்லூர்க் கந்தசுவாமி கோவிலுக்குரிய ஆதனம். வடக்கு, சின்னக்குட்டி பெண் மீனுட்சியின் ஆதனம். மேற்கு, மயில்வாகனம் சுப்பிரமணியத்தின் உரிமைக்காரருக்கும் மறுபேருக்குமுரிய ஆதனம். தெற்கு, ஆறுமுகம் பெண் கற்பகத்தின் ஆதனமும் இக்காணிக்கும் சின்னப்பு பெண் சீதேவனுக்கும் மறுபேருக்கும் பாவிப்புக்குரிய கை ஒழுங்கை முகப்பும் குறித்த காணிக்குள் இருக்கும் வீடுகள் புறநீங்கலாகவும் மிகுதியிற் சொரியலாய் எட்டில் மூன்றுபங்கும் அதற்குரியவைகளும் ($\frac{3}{8}$). முற்பதிவு D. $\frac{1565}{155}$.

**குறிப்பு:**— இதில் 1-ம் ஆதனம் 1945-ம் ஆண்டு ஐப்பசி மாதம் 27-ந் திகதி பிரசித்த நொத்தாரிஸ D. S. கந்தையா முகதாவில் 6917-ம் இலக்கத்தில் நல்லூர் ஆறுமுகம் வேலுப்பிள்ளைக்கு ரூபா 3000 - க்கும் 6 வீத வட்டிக்கும் பிரதான ஈடாகவும், 2-ம் 3-ம் ஆதனங்கள் 1945-ம் ஆண்டு புரட்டாதி மாதம் 12-ந் திகதி பிரசித்த நொத்தாரிஸ் S. இரத்தினசிங்கம் முகதாவில் 390-ம் இலக்கத்தில் நல்லூர் ஆசைப்பிள்ளை நடராசாவுக்கும் பெண் இலக்குமிக்கும் ரூபா 1300-க்கும் 8 வீத வட்டிக்கும் பிரதான ஈடாக இருக்கிறது.

சின்னத்தம்பி - சங்கரப்பிள்ளை
Commissioner & Licensed
Auctioneer
தெல்லிப்பழை 21-5-49 3380]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அஸ்தமன வேளை

பரணி

தொடர்கதை

## 10. "தூண்டிற் புழுவினைப்போல் ......"

"முருகா! முருகா! முருகா!
வருவாய் மயில்மீதினிலே
வடிவேலுடனே வருவாய்
தருவாய் நலமுந் தகவும்புகழும்
தவமும்திறமும்தனமும்கனமும்
அடியார் பலரின் குளரே
அவரை விடுவித் தருள்வாய்!
முடியா மறையின்முடிவே! அசுரர்
முடிவேகருதும்வடிவேலவனே!
சுருதிப் பொருளே வருக;
.............................."

.........பாரதியின் இனிய இச் செந்தமிழ்ப் பாடலைக் குமாரி சீதாவின் குரல் மேலும் தொடர்ந்துகொண்டே போயிற்று! அவளது பாதச் சதங்கைகள் பாடலுக்கேற்ற தாளத்துடன் சத்திக்கச் சத்திக்கச் சபையோர் இதயங்கள் தித்தித்துக்கொண் டிருந்தன. பாடல் முடிந்தபோதிலும், சபையோரைப் பூலோகத்துக்கு வரமுடியாமல் வாத்திய சங்கீதம் சொர்க்கலோகத்திலேயே நிறுத்திக்கொண்டிருந்தது. ஒரு நிமிஷம் நின்று களைப்பாறிய கன்னி சீதா மறுபடியும் காலைத் தரையில் தட்டிக்கொண்டு ஆரம்பித்தாள்.

"தூண்டிற் புழுவினைப்போல்
—வெளியே
சுடர்விளக்கினைப்போல்
நீண்டபொழுதாக—எனது
நெஞ்சந்துடித்ததடி!
கூண்டுக்கிளியினைப்போல்
—தனிமை
கொண்டுமிகவும் நொந்தேன்!
வேண்டும் பொருளையெல்லாம்
—மனது
வெறுத்துவிட்டதடி!........."

இந்தப் பாடல்தான் சபையோரை அதிகம் கவர்ந்தது. மனதை வேதனைக்குள்ளாக்கிற்று; அதே நேரத்தில் அதே மனசிலேயே இன்னதென்று தெரியாத ஒரு மகிழ்ச்சி; ஆனந்தம். "......தூண்டிற் புழுவினைப்போல்.....!" என்று நடனமணி ஆரம்பித்தபோது சபையோர் 'தூண்டிற் புழுவைப்போல்'த் துடிக்க ஆரம்பித்துவிட்டார்கள். ஆ—சீதாபதி?—அவரோ 'அந்தத் தூண்டிற் புழு வேறொருவருமில்லை தானே தான்' என்று எண்ணமிட்டார்.

"...எண்ணும் பொழுதிலெல்லாம்
—அவன்கை
இட்டஇடத்தினிலே,
தண்ணென்றிருந்ததடி—புதிதோர்
சாந்தி பிறந்ததடி!
எண்ணி எண்ணிப் பார்த்தேன்
—அவன்தான்
யாரெனச் சிந்தைசெய்தேன்.
கண்ணன் திருவுருவம்—அங்ஙனே
கண்ணின் முன் நின்றதேடி!"

சீதா பாடலை இவ்விதம் பூர்த்தியாக்கியபோது ஒவ்வொரு உள்ளமும், முன்பிருந்த வேதனையை மறந்து ஆனந்தித்தது. சபையின் மத்தியிலிருந்த ஒருவர் எழுந்து மேடையண்டை வந்தார். ஒரு சின்னஞ்சிறிய பெட்டி ஒன்றைச் சபைத் தலைவர் சீதாபதிக்கு முன்பாக நீட்டியபடி சபையைப் பார்த்து, "சபையோர்களே! இத்தகைய சிறந்த நடன விருந்தைத் தன் அரங்கேற்றத்தின்றே அளித்த ஸ்ரீமதி சீதாவுக்கு எல்லோரதும் சார்பாக ஒரு பரிசை அளிக்க விரும்புகின்றேன். அதைச் சீதா தேவியிடம் கொடுப்பதற்குத் தலைவர் சீதாபதியே தகுந்தவர் என்பது என் அபிப்பிராயம்!" என்றான்.

உதவிப் பரிசோதகர் அதை அருமையுடன் வாங்கிக்கொண்டே, சீதா நின்ற பக்கம் திரும்பினார். அவள் துள்ளிக்கொண்டே இரண்டடி முன் வந்தாள். பலத்த கரகோஷத்துக்கு மத்தியில் அந்தப் பெட்டி சீதாபதியின் கையிலிருந்து நடனராணியின் கைக்குவந்தது. சீதாவின் ரோஜா விரல்கள் ஒரு கணம் அவரது உள்ளங் கையைத் தொட்ட வண்ணம் நின்றன. பெட்டியைக் கொடுக்கும்போது அவர், அவள் முகமண்டலத்தை ஒரு கணம் பார்த்துப் புன்னகை புரிந்தார். சீதாவின் செவ்விதழ்களும் விரிந்து வெண்முத்தைக் காட்டின.

ஆ!—சீதாவின் மருண்ட கண்கள்! வேற் கண்கள்! அடடா! எத்தனையோ ஜால வித்தைகள் காட்டின. வளைந்தும், நெளிந்தும், 'படக் படக்' கென்று மூடித் திறந்தும் எத்தனையோ மாயங்கள் புரிந்தன, சீதாபதியைப் பார்த்து.

ஒருகணம் அவர் திண்டாடிப்போனார். ஆயினும் உடனே சமாளித்துக்கொண்டார். சீதா அந்தப் பெட்டியின் சின்னஞ் சிறிய மூடியைத் திறந்தாள். வைர மோதிரமொன்று மின்சார தீபத் தொனியில் 'பளிச்' சென்று மின்னலைத் தோற்றுவித்தது. அதை எடுத்து விரலில் அணிந்துகொண்டு அவள் மறுபடியும் நடனத்தை ஆரம்பித்து வைத்தாள்.

சீதாபதியும்தம்காற்காலியில் உட்கார்ந்தார்.

ஆறுமணிக்கு ஆரம்பமான நடனம் எட்டுமணிக்கெல்லாம் பூர்த்தியாயிற்று. சீதாபதி தலைமைப் பிரசங்கம் செய்தார், பிறகு நாடக சபையைச் சேர்ந்த ஒருவர் வந்தனோபசாரம் கூறினார்!"... ஸ்ரீமதி சீதாதேவியின நடன அரங்கேற்றத்துக்கு ஸ்ரீ சீதாபதி அவர்கள் தலைமை வகித்தது மிகவும் பொருத்தமான விஷயம்!...." என்று அவர் கூறியபோது சபையோர் ஒரே கரகோஷமாய்ப் பொழிந்து தள்ளினார்கள்.

கடைசியில் வைபவம் முடிவடைந்தது! ஜனங்கள் கலைய ஆரம்பித்தார்கள். பலரும் பல விதமாகப் பேசிக்கொண்டு போனார்கள். உதவிப் பரிசோதகரும் நாடகசபையார், ஸ்ரீமதி சீதா, அவள் தந்தை வெங்கடாசலம் யாவரிடமும் விடை பெற்றுக் கொண்டார். வெங்கடாசலம் அவரிடம் "அடிக்கடி நாடக சபைக்கு விஜயம் செய்யும்படி" கேட்டுக்கொண்டபோது அவர்மகிழ்ச்சி எல்லை கடந்துவிட்டது. தான் அடிக்கடி அங்கு போய் வரச் சௌகரியம் கிடைத்ததே யென்று அவருக்கு மகிழ்ச்சி.

நிச்சப்தம் நிறைந்த வீடுகளின் வழியாக மோட்டார் போய்க்கொண் டிருந்தபோது சீதாபதியின் நெஞ்சம் எதையெல்லாமோ எண்ணிற்று. "....அவன் கையிட்ட இடத்தினிலே, தண்ணென்றிருந்ததடி—" என்ற வரி அவரது செவிகளிலும் இதயத்திலும் மிதந்தது. சீதாவின் கைபட்ட தன் கை தண்ணென்றிருப்பதை அவரது உணர்ச்சி எடுத்தெடுத்துக் கூறிற்று. வந்தனோபசாரம் கூறியவர் சொன்ன வார்த்தைகளும் அவர் நெஞ்சத்து இன்ப அலைகளைக் கிளப்பின. சீதாவின் தோற்றம் "தூண்டில் புழுவினைப்போல்" என்று பாடிக்கொண்டே அபிநயம் பிடித்த காட்சி அப்படியே தத்ரூபமாக அவர் கண்களுக்குத் தோன்றிற்று, ஏனெனில் அவரே சீதாவைக் காண்பதற்குப் புழுவாய்த் துடித்துக் கொண்டிருக்கின்றாரல்லவா?

இந்தக் காதல் மனப் போராட்டங்களுக் கிடையே தன் தொழிலைப் பற்றிய—மேகநாதனைப்பற்றிய — சிந்தனைகளும் தோன்றாமலில்லை. 'ரயிலில் இன்றையத்தினம் களவு நடந்ததோ? மேகநாதன் எங்கே, என்ன செய்துகொண்டிருக்கிறானோ?' என்று எத்தனையோ எண்ணங்கள் எழுந்தன, அவர் மனத்திடையே.

அவர் இவ்விதம் எண்ணிய வண்ணமாய்த் தன் வீட்டுக்குப் போய்க்கொண்டிருந்த அந்நேரத்தில், மேகநாதன் கங்காநாடகசபைக் கட்டிடத்தில் உட்கார்ந்து பேசிக்கொண்டிருந்தான். பஞ்சநாதன் வெங்கடாசலத்துடன் பேசிக்கொண்டு, மேகநாதன் வருகையை எதிர்பார்த்துக் கொண்டிருந்தான்.

ஓர் அறை. மின்சார விளக்குச் ஜோதியைப் பெருக்கிக் கொண்டிருக்கிறது. அறையின் மத்தியில் அழகான விரிப்பு விரிக்கப்பட்ட ஒரு பெரிய மேஜை. மேசைக்கு இரண்டு பக்கங்களிலும் இரண்டு நாற்காலிகள். சீதாவும் மேகநாதனும் எதிர் எதிராக உட்கார்ந்திருக்கிறார்கள். இரண்டு 'கப்'புகளில் அற்புதமான 'டீ' ஆவி பறந்துகொண்டிருக்கிறது. சீதாவின் கண்கள் தீபத்தைச் சுற்றும் விட்டில்களை அர்த்தமின்றிப் பார்த்துக் கொண்டிருந்தன. மனசிற்றோன்றிய யோசனைகள் அவள் முகத்திலும் தென்படாமற் போய்விடுமா?

அதைக் கவனித்த மேகநாத் மெல்ல, "....சீ....தா....!" என்றான்.

"ஊம்!" என்றாள் அவள்.

"யோசனை மிகவும் பிரமாதமாயிருக்கே" அதுதான் கூப்பிட்டுப்பார்த்தேன்......."

".......யோசனை ஒன்றுமில்லை...மேகநாத்.......!......களைப்....பாயி...ரு...ந்த... ...து!...".

அவள் 'டீ கப்'பை எடுத்துப் பருக ஆரம்பித்தாள். மேசை விரிப்பிலுள்ள பூவைச் சுரண்டிக்கொண்டிருக்கும் அவளது மற்றத் தங்கமயமான கரத்தை, அவனதுகரிய கையின் விரல்கள் அடிக்கடி ஸ்பரிசித்துக்கொண்டிருந்தன. அவனும் 'டீ'யைக் கொஞ்சம் அருந்திக்கொண்டே, சீதா... இன்றைக்கு உன் 'டான்ஸ்' அபாரமாயிருந்தது! நானே பிரமித்துப் போனேன்! அவ்வளவு கன ஜோர்!...உன் 'தூண்டில் புழுவினைப்போல்' என்ற பாட்டு என்னையே துடிக்கப்பண்ணிவிட்டது! அப்படியானால் அவனை..." என்று விட்டுவிட்டான்.

அதற்குக் காரணம் அங்கே வெங்கடாசலம் வந்ததுதான். சீதாவும் தன் கையை அவன் கைக்குள்ளிருந்து விடுவித்துக் கொண்டாள். அப்போது அவள் முகம் மலர்ந்தமாதிரியிலிருந்து, இவ்வளவு நேரமும் தன் கையை அவனிடம் மனமில்லாமலே விட்டு வைத்திருந்தாள் என்பது தெரியவந்தது!

## 11. நிர்மலாவின் அறையில்

மத்தியானவேளை. உதவிப் பரிசோதகர் கங்கா நாடக சபைக்குப் போய்விட்டுத் திரும்பி வந்தபின் 'நாடகசபைக்கு' என்று நாம் பொதுவாய்க் குறிப்பிட்டிருப்பினும் அவர் போய்விட்டு வந்தது சீதாவிடம்தான்! அரங்கேற்று வைபவம் நடந்து பதினைந்து தினங்களுக்கு மேற் கழிந்துவிட்டன. இதற்கிடையில் அவர் அடிக்கடி நாடகசபைக்குப் போய் வந்து பழக்க மேற்படுத்திக்கொண்டார். இதனால் அவர் வருகையைக் கௌரவப்படுத்திக்கொண்டிருந்த நாடகசபையார், பிறகு அதைச் சாதாரண விஷயமாய்க் கவனிக்காமல் விட்டுவிட்டார்கள். இதைச் சீதாபதி அலக்ஷியம் செய்தார். மேலும் இது, அவர் சீதாவை அடிக்கடி கண்டு பேசுவதற்குச் சௌகரியமாயிருந்தது. சீதாவும் என்னதான் தலைபோகிறகாரியமாயிருந்தாலும் சீதாபதி வந்துவிட்டால் காரியத்தை அப்படியே போட்டுவிட்டு எழுந்து விடுவாள். பிறகு என்ன? ஒரே ஆனந்தமாய்ப் பொழுது கழியும். பிறகு விட்டுப் பிரிந்து செல்லும்போது வரம்பற்ற வேதனையுண்டாகும்.

இப்படியே அத்தனை நாட்களும் மாயமாய்ப் போய்க்கொண்டிருந்தனவே தவிர, 'நான் உன்னைக் காதலிக்கின்றேன்' என்று அவராவது அவளாவது வாய்விட்டுச் சொல்லவில்லை. அப்படியானல் அவர்கள் என்ன பேசினார்கள்; எதைச் செய்தார்கள்?—என்னவோ அர்த்தமில்லாமற் பேசிக் கொண்டிருந்தார்கள்; ஒவ்வொருவரும் மற்றவரின் உணர்ச்சியைப் பிரதிபலிக்கும் விதிகளின் வழியாக அவரவர் மனசை அறிய முயன்றுகொண்டிருந்தார்கள்.

இவ்விதமாகவே அன்றும் காலை ஒன்பது மணியிலிருந்து மத்தியானம்வரையிலும் சீதாவிடம் பொழுதைக் கழித்துவிட்டுச் சீதாபதி திரும்பினார்.

"ஐயோ!......" "ஐயையோ!..." இரண்டு தடவை அடுத்தடுத்துக் கேட்டது. இக்குரல் உதவிப்பரிசோதகர் காதில்அணுக்குண்டைப்போற் பாய்ந்து வெடித்தது.இரண்டாவது தடவை கேட்ட சப்தத்தில் தளர்ச்சியும் நடுக்கமுமிருந்தன. மோட்டார் நின்றது.

அவசர அவசரமாகச் சீதாபதி இறங்கி ஓடிவந்து பார்த்தபோது, அவர் நெஞ்சம் பிளந்து விடும்போ லிருந்தது!—நிர்மலாவின் தங்கையும் டொக்டர் சிவகுமாரின் பெண்ணும் நடன மாணவியுமான பேபி வஸந்துதான் அங்கே அடிபட்டு விழுந்து கிடந்தாள். அவள் இடது காலிலிருந்து இரத்தம் பெருகி வடிந்தோடியது.

இதற்குள் அங்கே பெரும் கூட்டம் கூடிவிட்டது. அங்கே நின்றவர் ஒரு உதவிப் பரிசோதகரா யிருந்ததால்தான் தப்பினார்; சாதாரண ஆசாமியாயிருந்தால் அடிகள் உதைகள் பரிமாறப்பட்டிருக்கும்.

',த்ஸா! த்ஸா!!..."

"யார் சப்இன்ஸ்பெக்டரா?"

"ஐயோ! பாவம் குழந்தை!"

"வஸந்துவுக்கு நன்றாய் அடிபட்டுவிட்டதோ?"—

"நான் அன்றைக்கு இவள் 'டான்ஸ்' ஆடினபோதே நினைத்தேன்! திருஷ்டி தோஷம் வந்துவிடப் போகிறதென்று."

ஜனக் கூட்டத்திலிருந்து இவ்விதமாகப் பலப்பல ஒலிகள் கிளம்பி வந்தன. கடைசியில் கூட்டத்துக்குள்ளிருந்து ஒரு கிழவர் வெளியே வந்தார். திகைத்து நின்ற உத

(தொடர்ச்சி 12-ம் பக்கம் பார்க்க)


## இலங்கை அரசாங்க ஈட்டு வங்கி
## THE CEYLON STATE MORTGAGE BANK

இந்த அரசாங்க ஈட்டு வங்கியிற் கடன்கள், பத்திரங்கள் மூலம் அசைவற்ற காணிகளின் பிணையிற் கீழ்க்காணும் விஷயங்களுக்குச் செலவுசெய்யும் பொருட்டுக் கொடுக்கப்படும்.

(1) கமத்தொழில் விஷயங்களுக்கும்,
(2) கட்டிடங்கள் கட்டுவதற்கும், விலைக்கு வாங்குவதற்கும், குத்தகைக்கு எடுப்பதற்கும்.
(3) மேற்காட்டிய விஷயங்களின் பொருட்டுக் கடன் வாங்கி யிருந்தால் அக்கடனைத் தீர்ப்பதற்கும்.
(4) ஏதாவது கட்டடங்கள் அல்லது காணியின் பேரிலுள்ள ஈடு மீளுவதற்கும்.

வட்டி விபரம் பின்வருமாறு:— கடன் எடுக்குந் தொகை 5,000 ரூபாவுக்குக் குறைந்திருந்தால் 6 வீத வட்டியும்; 5,000 ரூபாவுக்குக் கூடியும் 10,000 ரூபாவுக்குக் குறைந்துமிருந்தால் 5½ வீத வட்டியும்; 10,000 ரூபாவுக்குக் கூடியும் 50,000 ரூபாவுக்குக் குறைந்துமிருந்தால் 5 வீத வட்டியும்; 50,000 ரூபாவுக்குக் குறையாதிருந்தால் 4½ வீத வட்டியுமாம்.

கடன்கொடுக்கும் குறைந்த தொகை 2000 ரூபாவாகும். விபரங்கட்கு 'மனேச்சர்', இலங்கை அரசாங்க ஈட்டு வங்கி, இல. 127, கேமேல் பிளேஸ்', கொழும்பு, என்ற விலாசத்திற்கு எழுதி அறியவும்.

[3659]


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

The
# EELAKESARI
NATIONALIST TAMIL WEEKLY
LARGEST CIRCULATION IN CEYLON, INDIA & MALAYAN UNION

Vol. 19 | Chunnakam, Sunday, May 29, 1949 | No. 42

## அஸ்தமன வேளே

(11-ம் பக்கத் தொடர்ச்சி)

விப் பரிசோதகரிடம் "சீதா பதி! ஏன் இப்படி நிற்கிறேய்? அதோ பாரு ஆஸ்பத்திரியை! அங்கே வண்டியில் ஏற்றிக் கொண்டுபோ!" என்று நடுங் கிய குரலிற் சொன்னுர்.

சீதாபதியின் நெஞ்சிலிருந்து அவர் அப்படிச் சொன்னதும், பெரிய பாரம் ஒன்று இறங்கிவிட்டது.

பொழுது மலேவாயில் விழுவதற்குச் சற்று முன்னல் சீதாபதியின் மோட்டார் வண்டி 'டொக்டர் சிவகுமார்' என்ற பெயர்ப் பலகை தொங்கிய வீட்டின் முன்னல் வந்து நின்று, "க்றீ...க் க்றீ...க்" என்று ஒலி பெருக்கியது. நாலாவது தடவை மின்சார 'ஹோண்' இவ்விதம்சத்தமிட்ட பிறகு தெருக்கதவு மெல்லத் திறந்தது. கதவைத் திறந்தவள் நிர்மலா என்று அறிந்ததும் அவருக்கு மனதை என்னவோ செய்தது.

"உன் அப்பா, அம்மா எங்கே" என்று கேட்டார்.

"தாத்தாவின் ஊருக்குப் போயிருக்கிறுர்கள்!..."

'நீ ஏன் போகவில்லே?' என்று கேட்கவேண்டியிருந்தாலும், அது அதிகப் பிரசங்கித்தனமான கேள்வி; அதைக் கேட்கத் தமக்கு ஒரு உரிமையுமில்லே என்பதை அவர் உணர்ந்தார். ஆகவே அந்த எண்ணத்தை விட்டு விட்டு, "அடடா! இப்படி அவர்களில்லாத நேரத்தில் இது நேர்ந்து விட்டதே!..." என்று தலேயிலடித்துக்கொண்டார்.

அப்போதுதான் நிர்மலாவின் முகத்திலும் அச்சம் தோன்றிற்று. "என்ன நேர்ந்துவிட்டது?" என்று கேட்டாள்.

சீதாபதி மோட்டாரின் கதவைத் திறந்தார். பின் ஆசனத்தில் படுத்திருந்த வஸந்துவின் உருவம் அவளுக்குத் தெரிந்தது. "ஐயோ! அவளுக்கென்ன?" என்று கேட்டுக் கொண்டே ஓடிவந்தாள் மோட்டாருக்கருகில்.

"ஒன்றுமில்லே...மோட்டார் மெல்ல அடித்துவிட்டது!...."

"உங்கள் மோட்டார்தானே!"

"ஆமாம்..." என்றுர் சீதாபதி. பிறகு "வீட்டில் வேலேயாள் ஒருவருமில்லேயா...? என்று கேட்டார்.

"இல்லே! ஏன் கேட்டீர்கள்? இவளே உள்ளே கொண்டு சேர்க்கவா?... அதற்காகுல் நானிருக்கின்றேன்......!"

"அதற்குத்தான்" என்றுர் அவர்.

மேல்மாடி அறையொன்றில் மெத்தைப் படுக்கையின்மேல் வஸந்துவைப் படுக்க வைத்திருந்தார்கள். படுக்கையில் வஸந்துவுக்கு இடதுபக்கத்தில் நிர்மலா உட்கார்ந்தாள். வலது புறத்திலிருந்த நாற்காலியில் உதவிப் பரிசோதகரை "உட்காருங்கள்!" என்றுள். உட்காரும்போது சுவரில் வரிசை வரிசையாக மாட்டியிருந்த படங்கள் அவர் கவனத்தைக் கவர்ந்தன. ஸரஸ்வதிதேவி, லக்ஷ்மிதேவி, அமரகவி பாரதியார், மஹாத்மா காந்தி, பண்டித நேரு, இராஜாஜி... ஆ!....இந்த மூன்றுபடங்களும் யாருடையவை?... ஒன்று நிர்மலாவுடையதுதான்!... மற்றது நடன கலாவதி சீதாதேவியுடையது... இரண்டுக்கும் மத்தியிலுள்ளது? ... அடடா! என்ன விந்தை?... அந்தப் படம்! ....... சந்தேகமில்லே. சீதாபதியுடையதே தான்!...

அவரையும் அறியாமற் கிளம்பிய "ஆ!" என்ற வியப்பொலியானது, தங்கையைக் கவனித்துக்கொண்டிருந்த நிர்மலாவைத் திடுக்கிடச் செய்தது. அவள் நிமிர்ந்தாள். "என்ன படங்களா?... ஆமாம். இது என்னுடைய அறையேதான்! அதுதான் இப்படி அழகாய் வைத்திருக்கிறேன்!" என்று செவ்விதழ் விளிம்பில் ஓர் புன்னகையின் ரூபத்தைக் காட்டினுள்.

"ஓஹோ! இது உங்கள் அறையா?... மற்றப் படங்களேப்பற்றி ஒன்றுமில்லே. என் படத்தைக் கண்டதும்தான் ஆச்சரியமாயிருந்தது. ஆமாம்! என்னேப்பற்றி முன்பே உங்கள் அப்பாவுக்குத் தெரியுமோ?"

"அப்பாவுக்குமட்டுமென்ன! எங்கள் எல்லோருக்குமே உங்களேத் தெரியும்!"

நிர்மலா இந்த வார்த்தையை எவ்வளவு அழுத்தமாக— அர்த்த புஷ்டியுடன் சொன்னுள்?... சீதாபதி மறுபடியும் அந்தப் படங்களே நோக்கினுர். "மற்றப் படங்கள்!" என்று அவர் வாயிலிருந்து கிளம்பிற்று ஓர் அசட்டுக் கேள்வி.

"அது சீதாவின் படம் தான்! 'கங்கா நாடகசபை'யில் அன்று அரங்கேற்றினுளே அவளுடைய படம்..."

"ஹூம் மற்றது....!"

"...அது...வந்து....என்...னு...டைய...துதான்!"

"உங்களுடையதுதானு? தங்கையும், தமக்கையும் ஒரே சாடையா யிருக்கிறீர்கள்...... ஆமாம்...இவள் பெயர் வஸந்து; உங்கள் பெயர்?"

நிர்மலா "... இவள் பெயர் எப்படித் தெரிந்தது, உங்களுக்கு?"

"என் தாயார் சொல்லித் தெரிந்தது!"

"தாயாரா? இவளேப்பற்றி ஏன் உங்களுக்குச் சொன்னுர்?"

"எனக்குச் சொல்லவில்லே. இவளோடு உங்களேப்பற்றி ஏதோபேசிக்கொண்டிருந்தாள். அதில் தெரிந்தது ...!"

"என்னேப்பற்றியா?"

"ஆமாம்!"

நிர்மலா பிறகு ஒன்றும் பேசவில்லே. யோசனேயிலாழ்ந்தாள். சீதாபதியின் வாயும் மௌனம் சாதித்தது.

கீழே கூடத்திலிருந்தகடிகாரம் இடையில்அவர்கள்மௌன வேதனேக்கு ஒரு முற்றுப்புள்ளியிட்டது.

உதவிப் பரிசோதகர் கனேத்துக்கொண்டு, "சரி எனக்கு வேலேயிருக்கிறது!....ஆஸ்பத்திரியிலே டொக்டர் வஸந்துவை அங்கேயே வைத்திருக்கும்படி சொன்னுர்! நீங்கள் கவலேப்படுவீர்கள் என்று கொண்டு வந்துவிட்டேன்...... டொக்டரைத் தினமும் வந்து பார்க்கும்படி சொல்லியிருக்கிறேன். ....அடி பலமாய்த்தான் பட்டிருக்கிறது. ஆனுலும் சீக்கிரமாகவே மாறிவிடும்" என்று எழுந்தார்.

நிர்மலாவும் எழுந்துகொண்டே "சரி போதும், அதெல்லாம் நான் கவனித்துக்கொள்வேன்...." என்றுள்.

"ஊஹூம்!... அது முடியாது! நானே இந்த விபரீதத்தைச் செய்துவிட்டு அதைக் கவனிக்கும் பாரத்தை உங்கள் மேலே போடமாட்டேன்!"

நிர்மலா பெருமூச்சு விட்டாள்.

"சரி, போய் வரப்போகின்றேன்."

"போய்வாருங்கள்!"

மோட்டார் 'டிர்ர்ர்ர்...! என்று உறுமத் தொடங்கியதும் சீதாபதி, தம்மை வழியனுப்ப வந்து வாசற்படியில் நிற்கும் நிர்மலாவைப் பார்த்தார். அவளும் பார்த்தாள். அழகிய அவள் விழிப் பார்வையில், ஓரளவு சோகமும் மின்னுவதைக் கண்டதும், அவர் மனமும் பெரிதும் வேதனேக்குள்ளாயிற்று! "பாவம்! இந்தப் பெண்ணுக்கு என்ன கவலே? ஏதாவது என்னுல் ஏற்பட்டிருக்குமா?......" என்று எண்ணியவராய், இருட்டிவிட்டதின் பின்பு தம் வீட்டை யடைந்தார்.

—தொடரும்.

## திருச்சபை வைபவம்

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

சேர்ந்தவர். இளம் வயதிலேயே அவர் கல்வியிற் சிறந்தவராகவும் கடவுள் பக்தி மிகுந்தவராகவுங் காணப்பட்டார். மிகத் திறமையுடன் கல்வி பயின்று பல்கலேக் கழகப் பட்டங்களேப் பெற்ற இவ்வறிஞர் 1929-ம் ஆண்டிலே குருவானவராக அபிஷேகம் செய்யப்பட்டார். இவருடைய குடும்பம் தேவ ஊழியத்துக்குப் பெயர்போனது. கொழும்பு பரி. யோசேப் கல்லூரியின் அதிபராகப் பணியாற்றும் வணக்கத்துக்குரிய பிதா பீற்றர்பிள்ளே அவர்களும் இவருடைய சகோதரருவார்.

சாந்தமும் அமைதியும் நிறைந்த பிதா எமிலியானுஸ் பிள்ளே அவர்கள் நிர்வாகத் திறமையும் வாய்ந்தவர். திருச்சபையைச் சேர்ந்த குருமார்களிடையே இவருக்குப் பெருமதிப்பு இருந்துவருகின்றது. இவரது தூய சேவையைப் பெற்றுள்ள கத்தோலிக்க மக்கள் அவரைப் பொன் போற்போற்றுகின்றனர் இவர் ஏனேய மதத்தினரதும் நன் மதிப்பையும் பெற்றுள்ளார்.




— ஈழகேசரி —

ஆண்டுச் சந்தா ரூ. 6-00
தனிப்பிரதி விலே சதம் 10

சந்தா அதிபர்:
ஈழகேசரி
சுன்னுகம் :: இலங்கை

இப்பத்திரிகை, யாழ்ப்பாணம்–மயிலிட்டிதெற்கு திருமகன் நிலேயம் நா. பொன்னையா அவர்களால் சுன்னுகம். திருமகன் அழுத்தகத்தில் 1949-ம் ஆ மேமீ 29உ ஞாயிற்றுக்கிழமை அச்சிட்டு வெளியிடப்பெற்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org